# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**பிப்ரவரி 2007 ஜீவியம் 12 மலர் 10**

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| அன்னையின் துணை | 2 |
| ஆன்மாவும் செயல்திறனும் | 9 |
| லைப் டிவைன் | 12 |
| இம்மாதச் செய்தி | 20 |
| அன்பர் கடிதம் | 21 |
| யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 25 |
| அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்து கொள்ள வேண்டியது | 32 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 45 |
| சாவித்ரி | 49 |
| உலகம்-மோட்சம்-ஸ்ரீ அரவிந்தம் | 51 |

❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.
வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ **பிரச்சினையைத் தீர்க்க முயல்வதற்குப்பதிலாக பிரச்சினையை மறந்து அன்னையை நெருங்கினால் பிரச்சினை மறையும்.**

✡ **குறை சொல்வதற்குப்பதிலாக நன்றி தெரிவிக்கும்பொழுது பலன் உடனே கிடைக்கும்.**

# அன்னையின் துணை

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

இல. சுந்தரி

“அதை மட்டும் நீ விட்டுவிட்டால் உனக்குப் பெரிய அதிர்ஷ்டம் வரும்” என்றாள் அந்தப் பெண்.

சிரித்துக் கொண்டாள் வேலம்மா. எத்தனையோ முறை முயன்று தோற்றுப் போயிருக்கிறாள். ‘ஒருவேளை அதுதான் என் பிடிவாதமோ’ என்று தோன்றியது. ‘அன்னையே, அன்னையே’ என்று அன்னையைத் துணைக்கழைத்துக் கொண்டால் எதுவும் முடியும் என்று மீட்டிங்கில் சொன்னார்களே, என்றெண்ணி ‘அன்னையே நீங்கள்தான் எனக்குத் துணை வரவேண்டும்’ என நினைத்தாள். மனப்பூர்வமான நினைவுக்கே பலனுண்டு போலும்!

கதவைத் தட்டித் திறந்து கொண்டு உள்ளே வந்த அவள் கணவன் ‘‘வாடி, சோறு போடுடி’’ என்ற வழக்கமான ஏகவசனங்களை மறந்துவிட்டது போல, “என்ன வேலம்மா? குடிகாரப் பய வந்திட்டானான்னு பாக்குறியா? எனக்கும் இந்தக் குடியை விட்டுற ஆசைதான். ஆனா முடியலையே. மன்னிச்சுக்க தாயி” என்று தான் குடிப்பதற்கு முதன் முதலாக வருந்திக் கூறி ஆடியவாறு சாப்பிடாமல்கூட தூங்கப் போனான்.

மறுநாள் காலை வேலம்மா, தூங்கி எழுந்தவுடன் ‘அன்னையே, வெத்திலை போடுற ஆசைய நா வுட்டுப்புடணும்’’ என்று வேண்டிக் கொண்டாள். இருந்தாலும் அது அவ்வளவு சுலபமில்லை என்பது புரிந்தது. கை மெல்ல இடுப்பில் செருகியபடியேயிருக்கும் வெற்றிலை சுருக்குப்பையைத் தடவிப் பார்த்தது. இன்று மட்டும் ஒரு முறை போட்டால் என்ன என்று கை பிரித்துப் பார்த்தது. அதில் நேற்றைய முழுநேர வேலையில் வெற்றிலை வாங்கிவைக்காததால் பை காலியாய் இருந்தது.



ஏமாற்றத்திற்குப் பதில் தன் கள்ள ஆசையை எண்ணி வெட்கத்தில் சிரிப்பு வந்தது. நாக்கு வெற்றிலை போடாமல் துறுதுறுவென்றது. அவள் கணவன் எழுந்து வந்து பலகாரம் கேட்டான். பதில் பேசாது செய்து கொடுத்தாள். அவனும் ஏதும் பேசாமல் வேலை தேடி வெளியேறிவிட்டான். அவளும் வேலைக்குப் போகப் புறப்பட்டாள். வழியில் ராவுத்தர் கடையில் வழக்கம்போல் வெற்றிலை வாங்கச் சென்றாள். ஆனால் ராவுத்தர், ‘‘என்ன புள்ள சொல்லட்டும்? வெள்ளம் வந்து கொடிக்காலெல்லாம் அழிகிட்டதாம். வெத்தலைக்கு ஏக டிமாண்டு. பஸ் வேற ஊரு சுத்தி வரணும். வெத்திலை வருதோ வாராதோ தெரியல புள்ள’’ என்று சோகமாய்ச் சொன்னார்.

அன்னை தன்னுடைய அடக்க முடியாத ஆசையை எப்படியெல்லாம் முறியடிக்கிறார் என்று நினைக்க சிரிப்பு வந்தது.

‘‘என்ன வேலம்மா? எதை நினைச்சு சிரிக்கிறாய்?’’ என்றாள் எஜமானியின் பெண்.

“ஏதோ பழச நெனச்சு சிரிக்கறேன்மா” என்று கூறி விட்டுவிட்டாள். தான் எடுத்த முயற்சி பலிக்கும்வரை வெளியில் சொல்லக்கூடாது என்று சொற்பொழிவில் கேட்டதை நினைவுபடுத்திக் கொண்டாள்.

வெற்றிலை போடாத குறை உள்ளூர இருக்கிறது. அன்னைக்காக இந்தப் பாழாய்ப்போன பழக்கத்தை விடமுடியவில்லையே என்ற ஏக்கமும் இருந்தது. ‘அன்னையே, அன்னையே’ என்று சிறுபிள்ளைபோல் வெற்றிலை நினைவு வரும்போதெல்லாம் சொல்லிக் கொண்டாள். வேலை முடிந்து வீடு திரும்பும்வரை வெற்றிலை போடாது ஓட்டிவிட்டாள். ஆனால் கொஞ்சமாவது வெற்றிலை போட மனம் ஏங்கியது.

வீட்டிற்குப் போகப் புறப்பட்டவள் நான்கு வீடுவரை சென்று கொண்டிருந்தபோது நாலாவது வீட்டுக் கமலத்தம்மாள் பார்த்துவிட்டு, “வேலம்மா, ஒரு நிமிஷம் நில்லு” என்று கூறி உள்ளே சென்று வெற்றிலைப் பாக்குடன் வந்தாள். “இந்தா வேலம்மா, நேத்து எங்க வீட்ல சாமிக்குப் படைச்சது. எங்க வீட்ல யாரும் வெத்திலை போடறதில்லை. ஒனக்குத் தான் வெத்திலை பிடிக்குமேன்னு எடுத்து வெச்சேன்” என்று வெற்றிலைப் பாக்குடன் ஒரு ரூபாய் நாணயமும் சேர்த்துக் கொடுத்தாள். சிரித்துக் கொண்டே வாங்கி சுருக்குப்பையில் போட்டு, இடுப்பில் செருகிய வண்ணம் நடந்தாள். ‘வீட்டிற்குப் போனதும் மொதல் வேலையா ஒரு

வாய் வெத்திலை போட்டாத்தான் வேலை ஓடும்' என்று எண்ணியவாறு சென்றாள். அப்போது நேற்றைய பேச்சில் கேட்ட விஷயம் நினைவு வந்தது. 'நாம் ஒன்றை விட முடிவு செய்தபோது ஆசை எழுந்து நம்மை ஜெயிக்கப் பார்க்கும். அதற்குத் தோதாக நாம் ஆசைப்படும் பொருள் வலிய கிடைக்கும். அப்போது மனம் அடங்குவதுதான் உண்மையான கட்டுப்பாடு. கட்டுப்பாட்டிற்கு (சுயக்கட்டுப்பாட்டிற்கு) அன்னை பெரிதும் பலிப்பார்' என்ற செய்திதான் அது.

தன் ஆசையை நினைத்து வெட்கம் வந்தது. 'புருஷன் குடிக்கறத விட்டுவிட்டு நல்ல ஆம்பிளயா வாழணும்னா வெத்திலையை விட்டுடத்தான் வேணும். முடியை எடுத்தா நடக்கும்னா எடுத்திடறோம். தரையில உருண்டா கெடைக்கும்னா உருளுறோம். சாப்பிடாம இருந்தா பலிக்கும்னா பட்டினி கெடக்கறோம். அதெல்லாம் நம்மால முடியுறப்போ, இது மட்டும் ஏன் முடியாது? எஜமானியம்மா மக சொன்னது போல விட்டுட விருப்பமில்லைங்கறதுதான் உண்மை' என்று எண்ணியவாறு வெற்றிலையைத் தொடாமலேயே இருந்துவிட்டாள்.

அன்று அவள் புருஷன் குடிக்காமல் வந்தான். ஆனால் கையில் காசு கிடைக்காததால் குடிக்காமல் வந்தான். குடிக்காத ஏமாற்றம் அவனுக்கு. "ஏ புள்ள வேலம்மா, எங்கையில காசில்ல. ஏதாச்சும் காசு குடு" என்றான்.

"சரி, சரி, சோறு துன்னு, அப்பால காசு தர்றேன்" என்றாள்.

'ஏது காசு? குடிக்கறதுக்குக் கொடுக்கவா சம்பாரிக்கிறேன்?' என்று சண்டையிடும் அவள், சண்டையிடாமல் சொன்னாள்.

தன்னால் இந்த வெற்றிலை போடும் பழக்கத்தை விடமுடியாதது போல்தான் அவனும் குடியை விடமுடியாமல் தவிக்கிறான். இனி அவனோடு சண்டையிடப் போவதில்லை. தன்னிடமேதான் சண்டையிடப் போகிறாள். அதாவது வெற்றிலையை விட்டுவிடப் போராடப்போகிறாள்.

சோறு சாப்பிட்டு முடித்துவிட்டு, தன் முன் கை நீட்டி நிற்கும் புருஷனுக்கு பிளாஸ்டிக் டப்பியிலிருந்து ரூபாய்த்தாளை எடுத்துக் கொடுத்தாள். கொடுக்கும்போதே, 'அன்னையே, என் வெற்றிலை போடும் பழக்கத்தை நான் விட்டுவிட வேண்டும்' என்று வேண்டியவாறு கொடுத்தாள்.

"இப்படிக் காசு வாங்கியாச்சும் குடிக்கணுங்கற ஆசையை நெனச்சா



ரொம்ப வெக்கமா இருக்கு புள்ள. ஆனா முடியல" என்று கூறிச் சென்றான்.

இத்தனை நாளில் இப்படி ஒரு முறைகூடக் கூறியறியாத கணவன், இன்று இப்படிச் சொல்வது அவளுக்கு உடல் சிலிர்த்தது. 'அன்னையே' என்று நினைத்து, நிச்சயம் இந்த முயற்சி பலிக்கும் என்று நம்பினாள்.

சற்று நேரத்தில் தள்ளாடாமல் வந்து நின்றான். "என்ன நெனச்சு காசு குடுத்த புள்ள? நீ என்னெ ஏசிப்பேசிக் காசு கொடுத்தப்ப எல்லாம் குடிச்சுட்டு வருவேன். இன்னிதினம் சாராயமே கெடக்கல புள்ள. அங்கே போலீஸ்காரங்க பூந்து ஒரே கலவரம். சாராயமெல்லாம் கொட்டிக் கவுத்து, ஒரே சண்டை. பயந்துபோய் வந்திட்டேன்" என்றான்.

வேலம்மாவுக்கு நம்பிக்கை (தான் மாறினால் புருஷன் மாறுவான் என்ற நம்பிக்கை) வலுத்தது.

மறுநாள் காலை எழுந்தவுடன் அவள் கை இடுப்பில் செருகிய வெற்றிலைச் செல்லத்தைத் தடவிப் பார்க்கவில்லை. காரணம் எழுந்திருக்கும்போதே அன்னையை நினைத்து எழவேண்டும் என சொற்பொழிவில் கேட்டதை நினைவுபடுத்த, அதே நினைவாக இருந்ததில் வெற்றிலை மறந்தேபோனது.

வழக்கமான வீட்டு வேலைகளை முடித்து, புருஷனுக்கு இட்லி வேகவைத்து கொடுத்துவிட்டுப் புறப்பட்டாள். போகும்போது நேற்று கொடுத்த காசு அவனிடம் இருப்பதால் 'குடித்துவிட்டு வராதே' என்று சொல்ல நினைத்து, நினைவை மாற்றிக்கொண்டாள். 'பேசக்கூடாது. நமக்குள் பேசாமல் செய்ய வேண்டியதைச் செய்தால் போதும்' என்று சொற்பொழிவில் கூறியதை நினைத்தாள். அவன் குடிப்பதை நிறுத்தும் சாவி தன்னிடமுள்ளது. தான் வெற்றிலை ஆசையை மனமார விட்டுவிடுவதுதான் அது என்று உள்ளூரப் புரிந்தது. அதனால் எதுவும் பேசவில்லை. 'அன்னையை நம்பினால் நம் எண்ணத்தை விட்டுவிட வேண்டும். பொறுப்பை அவரிடம் விட்டுவிட வேண்டும்' என்று சொல்லப்பட்டதையும் நினைவுபடுத்திக் கொண்டாள். அவள் இதையொரு சத்தியசோதனையாகவே ஏற்றுக் கொண்டாள்.

"ஏன் புள்ள வேலம்மா? நேத்து நீ எங்கையில குடுத்த காசு எங்கிட்டதான் இருக்கு. 'குடிக்காம ஒழுங்கா வா'ன்னு ஏன் சொல்லல?" என்று அமைதியாக இருந்த அவளைச் சீண்டினான்.

"கையில காசு இருந்தா குடிச்சிட முடியுமா, என்ன?" என்றாள்.

“ஓ, நேத்து வந்திட்டேன்னு சொல்றியா?” என்றான்.

“இல்ல, அது இல்ல. இது வேற” என்றாள்.

“வேற என்ன?” என்றான்.

“அன்னைன்னு ஒரு மந்திரம் இருக்கு. அதைச் சொன்னா தப்பு செய்ய முடியாது” என்றாள்.

“ஓ! நீ இப்ப மந்திரமெல்லாம் படிக்கிறியா?” என்றான்.

“நான் போய்ப் படிக்கல. அதுவா கெடச்சது” என்றாள்.

“அதனாலதான் நான் நேத்து குடிக்காம வந்தேன்னு நெனக்கறியா?” என்றான். மேலும், “ஓம் மந்திரமெல்லாம் குடிக்கிறவங்கிட்ட பலிக்காது” என்று கேலியாய்ச் சொல்லிச் சிரித்துவிட்டுப் புறப்பட்டான்.

திடீரென்று வேலம்மாவுக்கு வெற்றிலை நினைவு வந்தது. அப்பாடி! ஆன வயசுக்கு ஒரு நாகூட வெத்திலை தின்னாம இருந்ததில்ல. ஆனா நேத்து பூரா வெத்திலையே போடல. அது நெனவு வந்தா ஆசை வருது. அத நெனைக்காம இருக்க அன்னைய நெனக்கிறதுதாஞ் சரி. ‘அன்னையே ஒம் அருளால இந்தப் பாழாப்போன வெத்தில ஆசை வரக்கூடாது’ என்று வேண்டியவாறு புறப்பட்டாள்.

எதிரே அடுத்த வீட்டு பாக்கியம் வந்து, “வேலம்மா, ஒரு வாய் வெத்தில பாக்கு இருந்தாக் குடேன்” என்றாள்.

நேற்று கமலத்தம்மாள் தந்ததை சுருக்குப்பையோட அவளிடம் தந்தாள்.

“என்ன பையோட தர்ற?” என்றாள் பாக்கியம்.

‘‘பரவாயில்ல பாக்கியம். நீ வச்சுக்க. எங்க எஜமானியம்மா பொண்ணுக்கு வெத்தில போட்டா புடிக்காது. இத எடுத்திட்டுப் போனா பாதி வேலைல போட்டுக்குவேன். அதான் நீயே வச்சிக்க” என்றாள்.

“உனக்கு வேணான்னாக்க குடுத்திடு” என்று பாக்கியம் வாங்கிச் சென்றாள்.

‘‘என்ன வேலம்மா, இன்னிக்குப் பாதி சுத்தம் செய்யும்போதே விட்டுவிட்டுப் போகமாட்டாயல்லவா?” என்று குறும்பாய்க் கேட்டாள் எஜமானியம்மாவின் மகள்.

அவளும் சிரித்துக்கொண்டே, “நிச்சயமா போகமாட்டேன்மா. நா அந்தப் பழக்கத்தையே விட்டுப்புட்டேன்” என்றாள்.

“வெரி குட். இனி உனக்கு அதிர்ஷ்டம்தான் பாரேன்” என்று மகிழ்ந்து



பாராட்டினாள்.

மேலதிகாரியின் பாராட்டு நல்ல டானிக் அல்லவா? வேலம்மா கூடுதல் கவனத்துடன் வேலைகளைச் செய்தாள்.

வெற்றிலை போடாதது வெறும் மனக்குறைதான். அதனால் எந்தப் பாதிப்புமில்லை என்று அவளால் உணர முடிந்தது. ‘இந்த வெத்திலப் பழக்கத்தால், அத வாங்க முடியாதபோதெல்லாம் ஏமாற்றம் வரும். கோபம் வரும். கோபத்தை மற்றவரிடம் காட்ட நேரும். வேலை செய்யுமிடத்தில் வெத்திலை நினைவால் வேலையை சரியாய்ச் செய்யாது திட்டு வாங்கியதுண்டு. ஆனால் வெற்றிலையே போடாத இந்த இரண்டு நாளில் மனம் சுறுசுறுப்பாய், உற்சாகமாயிருக்கிறது. அன்னையே! உமக்கு நன்றி, நன்றி” என்று மனம் நெகிழ்ந்து வீட்டிற்கு வந்தாள்.

ராச்சோறு ஆக்கி புருஷனின் வரவிற்குக் காத்திருந்தாள். புருஷன் வந்தான். தள்ளாடாமல் தெளிவாய் வந்தான். ஆனால் சோகமாய் இருந்தான்.

“கைகால் கழுவி சோறு துன்ன வா மச்சான்” என்று அழைப்பு விடுத்தாள்.

“இல்ல புள்ள. இன்னக்கி சோறு வேணாம் புள்ள. நெஞ்சு கனமா கனக்குது. வயிறு பசிக்கல” என்றான்.

“நேரத்தோட வந்தீன்னா டாக்டர் ஐயாகிட்ட போய் எதுனா மருந்து வாங்கியிருக்கலாமில்ல?” என்றாள்.

“இல்ல புள்ள. என் ஒடம்புக்கு ஒண்ணுமில்ல. மனசு கஷ்டம் தாளல” என்று விம்மினான்.

“நீ என்ன சொல்லுற? என்னாயிடுச்சு ஒனக்கு?” என்றாள் வேலம்மா.

“ஓம் மந்திரம் பலிச்சுடுச்சி புள்ள. இனிமே நா குடிக்க மாட்டேன்” என்றான்.

“நா மந்திரம் ஒண்ணும் போடல. ஒரு பேச்சுக்கு சொன்னேன்” என்றாள்.

“இல்ல புள்ள, கடவுள் கருணையில இன்னிக்கு எனக்கு நெசமாவே புத்தி வந்திடுச்சி” என்றான்.

“புரியுற மாதிரி சொல்லு மச்சான்” என்றாள்.

“எனக்கு இன்னிக்கு பெரிய ஐயா வூட்ல தோட்ட வேல கெடச்சிது. ஒரு நாள் வேலை. சுளையா 150 ரூவா கொடுத்தாங்க. நேரமாயிடுச்சு.

இருந்தாலும் கையில காசு இருக்குற தெம்புல சாராயக்கடைக்குப் போனேன். ஆனா அங்க ஒரே போலீஸ் அடிதடி. ஆஸ்பத்ரி பஸ் வேற (ஆம்புலன்ஸ்). நான் போவறதுக்கு முந்தியே பாவிப்பசங்க எல்லாம் குடிச்சிட்டு மயங்கி விழுந்துகிடந்தாங்க. வெஷசாராயம்னு பேசிக்-கிட்டாங்க. சில பேரு செத்துட்டாங்க. சில பேரு ஆஸ்பத்ரில உயிரு ஊசலாடிக் கெடக்கறாங்க. செத்தவங்கள சுத்தி ஒரே கூட்டமா அழுதிட்டிருந்தாங்க. அப்போ அங்க வெள்ள சீலை கட்டின பொம்பளைங்க சாமியாரம்மாகணக்கா இருந்தவங்க சில பேரு வந்தாங்க. அவுங்க அழறவங்ககிட்ட, 'செத்தவங்க முன்ன அழுது அவங்க உயிரு நல்ல கதி அடையறத தடுக்கக்கூடாது. அவங்கமேல ஒங்களுக்கு உண்மையா பிரியம் இருந்தா அமைதியா கடவுள வேண்டுங்க' என்று சொல்லி அவங்க எல்லாம் கண்ண மூடி தவம் (தியானம்) செஞ்சாங்க. அப்பால அழறவங்களப் பாத்து 'மெய்யாலுமே இவங்களுக்காக நீங்க எதுனா நல்லது செய்ய நெனச்சா, நீங்க குடிக்கறத விட்டுவிடறதா சத்தியம் எடுத்துக்கங்க. உங்க கண் முன்னால துடிச்சு செத்ததை பார்த்த பிறகும் நீங்களும் அதே தப்பை செய்யுறதில என்ன பிரயோசனம்'ன்னாங்க. இன்னும் புத்தில உரைக்கறாப்பல நல்லதெல்லாம் சொன்னாங்க. இனிமே குடிக்கறதில்லேன்னு நானும் முடிவு செஞ்சிட்டேன் புள்ள. ஆனாலும் மனசு நல்லாயில்ல. நிம்மதியா இருக்கணும்போலயிருக்கு" என்றான்.

"கவலப்படாத மச்சான். மனச நிம்மதியா ஆக்குற இடம் ஒண்ணு இருக்கு. நாளெபொழுது விடிஞ்சதும் ஒன்னெ அங்க இட்டுணு போறேன்" என்றாள்.

'அன்னையே எம் புருஷன் திருந்திட்டாரு. அது எனக்குச் சந்தோஷம் இல்ல; பெருமையுமில்ல. உம்ம கருணைனு புரிஞ்சிட்டேன். எம் புருஷன் குடிக்கறதில்லேன்னு சொன்னப்போ நா அவருக்குள்ள ஒம்மைத்தான் பார்த்தேன். நீரே அவருக்குள்ள வந்து சொன்னதா ஏழை மனசு நம்புது. உம்ம கிட்டவே இருந்து, உம்மையே நெனச்சா எதுவுமே முடியும்னு தெரிஞ்சுகிட்டேன். அன்னிக்கு தியானத்தில கேட்டதெல்லாம் மெய்யாலுமே பலிச்சிடுச்சி' என்று உருகினாள்.

*முற்றும்*

❀❀❀



# ஆன்மாவும் செயல்திறனும்

N. அசோகன்

ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள காங்கோ நாட்டில் லுமூம்பா என்பவர் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முக்கியமான காரணம் அவர் ஒரு பட்டதாரியாக விளங்கியதுதான். அந்நாட்டில் அந்நேரம் பதின்மூன்று பட்டதாரிகள்தான் இருந்தார்கள். இந்திய சுதந்திரத்திற்காகப் பேச்சுவார்த்தைகள் நடந்தபொழுது இந்தியாவின் சார்பாக வந்திருந்த காந்தி, நேரு, படேல், ஜின்னா மற்றும் லியாகத் அலி ஆகிய ஐவரும் லண்டனில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்களாக விளங்கினர். அவர்களுக்கு மற்ற திறமைகளிருந்தாலும் அவர்களுக்குக் கிடைத்த ஆங்கிலப் படிப்பு அவர்கள் தலைவர்களாகத் தலையெடுக்க உதவியது என்பது தெளிவாகிறது. ஒரு கட்சியில் தனித்தன்மையோடு விளங்குகின்ற தலைவர் மற்றும் பெயர் பெற்ற வழக்கறிஞர்கள், கல்வித்துறை நிபுணர்கள் ஆகியோரைப் பார்த்தால், இவர்களெல்லாம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்தில் பிஎச்.டி. பட்டம் வாங்கியவர்களாக இருப்பது தெரியவரும். புகழ் பெற்ற பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெறுவது, செயல்திறன் மேம்படுவதற்குச் சிறந்ததொரு வழியாகும்.

அமெரிக்காவில் Fred Smith என்பவர் Federal Express என்ற கொரியர் சர்வீஸை ஆரம்பித்த 20 வருடங்களிலேயே அக்கம்பெனியின் வருடாந்திர விற்பனையை 40 பில்லியன் டாலர் அளவிற்கு உயர்த்தினார். இந்த அற்புதமான ஆற்றல் அவருக்கு எப்படி வந்தது? வியட்நாம் போரில் அவர் ஒரு வீரராகப் பணியாற்றியிருந்தார். ராணுவத்தில் கட்டுப்பாடு என்பது மிகவும் முக்கியமாகும். இந்த ராணுவப் பயிற்சிதான் அவருடைய வியாபார வெற்றிக்கு வித்தாக அமைந்தது.

ராஜா ராவ் சிறந்த ஆங்கில எழுத்தாளராகத் தலையெடுத்தார்; அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். ராதாகிருஷ்ணன் சர் பட்டம் வாங்கினார்; இந்திய அரசியலில் உச்சநிலைக்கு வந்தார். சர். சி.பி. ராமசுவாமி இளம் வயதிலேயே வைஸ்ராயுடைய எக்ஸிக்யூட்டிவ் கவுன்சிலில் உறுப்பினராகச் சேர்ந்தார். இவர்களுடைய முன்னேற்றத்திற்கு ஆதாரமாக இவர்களுக்குப் பின்னால் ஆன்மீக அறிவோ அல்லது அதைத் தாங்கிய ஆன்மீக அம்சம்கொண்ட ஒருவரோ இருந்திருப்பார்கள். ராஜா ராவின் தகப்பனார் தினமும் இரவு 1.00 மணி வரையிலும் கோவிலில் தியானம் செய்வாராம். சி.பி. ராமசுவாமி, தமிழ் நாட்டில் வாழ்ந்த மகான் ஒருவருடைய பரம்பரையில் வந்தவராவார். ராதாகிருஷ்ணன் வேதத்தில் வல்லுநராக விளங்கினார்.

உயர்ந்த கல்வி, ராணுவக் கட்டுப்பாடு, ஆன்மிகப் பின்னணி ஆகியவை சாதாரண மனிதர்களை, அவர்களுடைய சகாக்களைவிட, பலமடங்கு உயர்த்துகிறது. தம்முடைய வாழ்க்கையில் நேரடியாக ஆன்ம சக்தியைச் செயல்பட வைப்பவர், மேற்கண்டவர்களுடைய சாதனைகள், பர்சனாலிட்டியின் மேல்மட்டத்திலிருந்து நிகழ்த்தப்பட்டவை என்று புரிந்து கொள்ளுமளவிற்கு, தன்னிலையில் அபாரமாக உயர்வார். ஆன்மா முழுமையாக வெளிப்படும்பொழுது வாழ்வில் அப்படியோர் அபாரமான பலனிருக்கும்.

செயல்திறனென்பது 'பிஸிக்கலா'கவுமிருக்கலாம் அல்லது அறிவுரீதியானதுமாகவும் இருக்கலாம். இரண்டாவது முதலைவிடப் பல மடங்கு உயர்ந்ததாகும். 'பிஸிக்கல்' செயல்திறன் கூட பெரியதாகச் சாதிக்கும். நெருக்கடியான நேரங்களில் உடம்பின் செயல்திறன் பல மடங்கு உயரும். ராணுவத்தில் போர்க்காலத்தில் இதைப் பார்க்கலாம். இரண்டாம் உலகப்போர் சமயத்தில் மூன்று மாதங்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு ரிப்பேர் வேலை ஒன்று அமெரிக்க ராணுவத்திற்கு வந்தது. தேசபக்தியால் உந்தப்பட்ட வீரர்களும், அதிகாரிகளும் அந்தப் பெரிய வேலையை 48 மணி நேரத்தில் முடித்தார்கள். இச்சாதனைச்



செயல்திறன் 45 மடங்கு உயர்ந்துள்ளதைக் காட்டுகிறது. இப்படி உடம்பின் செயல்திறனை உச்சிக்குக் கொண்டு போக முடியாமல் அடுத்தகட்டமான அறிவின் செயல்திறனுக்கு உயர முடியாது. அஷ்டாவதானம், சதாவதானம் போன்றவை அறிவின் செயல்திறனுக்கு உச்சக்கட்ட எடுத்துக்காட்டுகள். நம்முடைய உடலுழைப்பை உச்சக்கட்டத்திற்குக் கொண்டுபோனால், அதன்பின்னர் இத்தகைய அறிவுரீதியான செயல்திறன் நம்மிடையே வெளிப்படக்கூடிய வாய்ப்புகள் எழும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**நற்செயல்எனில் பழைய நோக்கங்கள் விலக்கப்பட வேண்டும்.**

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆசைக்குப் பின்னால் ஆண்டவனிருப்பதாக அன்னை கூறுகிறார். மனித முயற்சியின் சிகரத்திற்குப் பின்னால் இறைவன் இருக்கிறான்.

பிராணமயப்புருஷனுக்குப் பின்னால் அன்னையும், அன்னமயப் புருஷனுக்குப் பின்னால் வேதரிஷிகளும் இறைவனைக் கண்டார்கள்.

***ஆண்டவன் ஆசைக்குப் பின்னாலிருக்கிறான்.***
***சைத்தியப்புருஷனுக்குப் பின்னால்***
***பூரணயோகம் இறைவனைக் காண்கிறது.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XV. The Supreme Truth-Consciousness

**There is something we have to realise.** Page No.134
**We can to a certain extent conceive of it.** Para No.5
**It is the view of the all-comprehending Supermind.**
**It embraces and unites the successions of Time and divisions of Space.**
**This factor of Time is indispensable.**
**In its absence, there would be no change.**
**There would be no progression.**
**There would be a perfect harmony.**
**It would be perfectly manifest.**
**It would be coeval with other harmonies.**
**It is a sort of eternal moment.**
**It is not successive to them.**
**It is not a movement from the past to the future.**
**Instead, there is a constant succession.**
**It is a developing harmony.**
**Here one strain rises out of another that preceded.**
**It conceals in itself that which it has replaced.**
**The Self-manifestation can exist without the factor of Space.**



## 15. உயர்ந்த சத்தியஜீவியம்

நாம் அறிய வேண்டியது ஒன்றுண்டு.
ஓரளவு நாம் அதைக் கருத முடியும்.
அது காலத்தைக் கடந்த சத்தியஜீவியத்தின் நோக்கம்.
அது இடத்தின் பகுதிகளையும், காலத்தின் தொடர்ச்சியையும் தழுவும்.

காலம் என்ற அம்சம் தவிர்க்க முடியாதது.
காலமில்லையெனில், மாற்றமிருக்காது.
முன்னேற்றமிருக்காது.
சிறப்பான சுமுகம் இருக்கும்.
அது பூரணமாக வெளிப்படும்.
மற்ற சுமுகங்களுடன் அது உடன் உறையும்.
ஒரு வகையில் அது காலத்தை வென்ற காலமாகும்.
அங்குத் தொடர் நிகழ்ச்சியில்லை.
கடந்தது வரப் போவதை எட்டும் சலனம் அங்கில்லை.
அதற்குப் பதிலாக, தொடர்ந்த நிகழ்ச்சிகள் நிரந்தரமாக இருக்கும்.
அது வளரும் சுமுகம்.
ஒரு ஸ்வரம் முந்தைய ஸ்வரத்தினின்று எழுகிறது.
கடந்ததை அது மறைக்கும்.
சுய வெளிப்பாடான சிருஷ்டி இடமின்றி இருக்கலாம்.

**Then, there would be no mutable relation of form.**
**Nor will there be the intershock of forces.**
**All would exist.**
**But would not be worked out.**
**(It will be a spaceless self-consciousness.**
**It will be purely subjective.**
**It would contain all things.**
**It will be in an infinite subjective grasp.**
**It will be like the mind of a cosmic poet or dreamer.**
**But would not distribute itself.**
**It does so through an indefinite objective extension.)**
**Or, again Time alone may be real.**
**Its successions would be a pure development.**
**In it one strain would rise out of another.**
**It would be a subjective free spontaneity.**
**It would resemble a series of musical sounds.**
**Or, it will be like a succession of poetical images.**
**Instead, we have a harmony.**
**It is worked out in terms of Time and Space.**
**It is in terms of forms and forces.**
**They stand related to one another.**
**It is in an all-containing spacial extension.**
**It is an incessant succession.**
**It is one of powers and figures of things and happenings.**
**It is in our vision of existence.**

**Time and Space is a field of existence.** **Page No.135**
**Different potentialities are created there.** **Para No.6**
**They are embodied, placed, related to this field.**
**Each has its powers and possibilities.**



**அப்பொழுது மாறும் ரூபமிருக்காது.**
**சக்திகளின் மோதலிருக்காது.**
**அனைத்துமிருக்கும்.**
**ஆனால் அவை செயல்படா.**
**(அது இடமில்லாத சுய-ஜீவியமாகும்.**
**அது அகத்திற்கேயுரியதாகும்.**
**அனைத்தையும் அது உட்கொண்டதாகும்.**
**அது அனந்தமாக அகத்தின் பிடிப்பிலிருக்கும்.**
**அது பிரபஞ்ச கவியின் மனம் போலிருக்கும். அவர் கனவு போலிருக்கும்.**
**ஆனால் அது தன்னை விநியோகிக்காது.**
**முடிவில்லாத புறத்தின் நீட்சியாக இருக்கும்.)**
**அல்லது, காலம் மட்டும் உண்மையாக இருக்கலாம்.**
**அதனுடைய கட்டங்கள் தானே வளர்வதாக இருக்கும்.**
**அங்கு ஒரு ஸ்வரத்தில் அடுத்தது எழும்.**
**அது இயல்பாக எழும் அக உணர்வாகும்.**
**தொடர்ந்த பாட்டு ஸ்வரங்களாக அது அமையும்.**
**அல்லது தொடர்ந்த கவியின் கற்பனை ரூபங்களாகும்.**
**அதற்குப் பதிலாக, ஓர் சுமுகமிருக்கும்.**
**அது காலத்திலும், இடத்திலும் எழும்.**
**அது ரூபமாகவும், சக்தியாகவும் அமையும்.**
**அவை ஒன்றோடொன்று தொடர்புள்ளதாக இருக்கும்.**
**எல்லாவற்றையும் உட்கொண்ட இடத்தின் வீச்சு அது.**
**அது முடிவற்ற தொடர்.**
**அது சக்தி, ரூபம், நிகழ்ச்சி.**
**அது நாம் காணும் பிரபஞ்ச திருஷ்டி.**

**காலமும், இடமும் பிரபஞ்ச வாழ்வின் அரங்கம்.**
**அங்கு பல வாய்ப்புகள் எழுகின்றன.**
**அவை உயிர் பெற்று, இடம் பெற்று, இதனுடன் தொடர்பு கொள்கின்றன.**
**ஒவ்வொன்றிற்கும் சக்தியுண்டு, வாய்ப்புண்டு.**

They front the other powers and possibilities.
Successions of Time bring about its result.
Those results have this appearance.
The appearance is to the mind.
It is a working out of things.
It is a shock and struggle.
It is not a spontaneous succession.
The reality is different.
It is a spontaneous working out of things.
It is from within.
The shock and struggle are external.
It is only a superficial aspect of this elaboration.
There is an inner inherent law.
It is of the one and the whole.
It is necessarily a harmony.
It governs the outer and processive laws of the parts.
The parts are forms.
They appear to be in collision.
This is a greater and profounder truth of harmony.
It is always present to the supramental vision.
This is a discord to the mind.
It is only in appearance.
It is so because each is considered separately in itself.
There is a harmony.
It is ever present and ever developing.
This discord is an element of that harmony.
It is a harmony to the Supermind.
Its view is one of unity.
To it all things are in a multiple unity.
Mind sees only a given time and space.



மற்ற சக்திகளுக்கு இவை முகமாக இருக்கின்றன.
காலத்தின் சுழல் இவற்றிற்குப் பலன் தருகின்றன.
இப்பலன்கட்குத் தோற்றமுண்டு.
இது மனம் காணும் தோற்றம்.
நிகழ்ச்சிகள் செயல்படும் வகையிது.
இது மோதலும், போராட்டமுமானது.
இது இயல்பான எழுச்சியன்று.
உண்மை வேறு.
இயல்பின் எழுச்சி தன் போக்கை இங்ஙனம் காண்கிறது.
இது உள்ளிருந்து எழுவது.
மோதலும், போராட்டமும் புறத்திற்குரியன.
இவ்விளக்கத்தின் மேலெழுந்த அம்சம் இது.
உடன் பிறந்த உள்ளுறைச் சட்டம் ஒன்றுண்டு.
அது முழுமையின் ஜீவன் அளிப்பது.
அது சுமுகமானது என்பது விலக்க முடியாத விஷயம்.
பகுதியின் பாங்கு புறத்தில் ஆட்சி செய்வதாகும் இது.
பகுதிகள் ரூபங்கள்.
அவை மோதுவதாகக் காணப்படும்.
சுமுகம் ஆழ்ந்தது, கனத்த சத்தியத்தைத் தாங்குவது.
சத்தியஜீவியத்தின் பார்வை அதை இழப்பதில்லை.
மனம் அதைப் பிணக்காகக் காண்கிறது.
அது தோற்றம்.
ஒவ்வொன்றையும் தனித்துக் காண்பதால் அப்படித் தோன்றுகிறது.
சுமுகம் உண்டு.
சுமுகம் நிலையாக, நிரந்தரமாக வளர்கிறது.
இப்பிணக்கு அச்சுமுகத்தின் ஒரு பகுதி.
அது சத்தியஜீவியத்திற்குச் சுமுகம்.
அதன் நோக்கம் ஐக்கியம்.
அதன் பார்வையில் அனைத்தும் ஐக்கியத்தை நாடித் தழுவுகின்றன.
மனம் ஒரு புள்ளியைக் காண்கிறது. அதன் காலமும், இடமும் தெரிகின்றன.

**It views many possibilities pell-mell.**
**They are all more or less realisable in that time and space.**
**The Supermind is divine.**
**It sees the whole extension of Time and Space.**
**It can embrace all the mind’s possibilities.**
**It sees very many more.**
**They are not visible to the mind.**
**But they are all without any error.**
**Nor do they grope or confuse.**
**It perceives each potentiality.**
**It sees it in its proper force.**
**Also it sees the essential necessity and right relation to the others.**
**It sees in the right time, place and circumstances.**
**It sees its gradual and ultimate realisation.**
**The Supermind sees things steadily.**
**And it sees them as a whole.**
**It is the nature of Supermind.**
**Because it is transcendent.**
**It is not possible for the mind.**

*Contd....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

“எனது நோக்கம் சரி” என்று கூறுவதற்குப்பதிலாக, “சரியான நோக்கத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்’’ என்பது மாறுவதற்கு அடையாளம்.

***மாறுபவன் சரியானதை ஏற்பான்.***



**பல வாய்ப்புகள் அதற்குக் குழப்பமாகக் காட்சியளிக்கின்றன.**
**அவையனைத்தும் ஏறத்தாழ காலத்தில் பலன் தரக்கூடியவை.**
**சத்தியஜீவியம் தெய்வீகமானது.**
**அது காலத்தின் நீட்சியை இடத்தின் வீச்சில் முழுமையாகக் காண்கிறது.**
**மனம் காணும் வாய்ப்புகள் அதனுள் அடக்கம்.**
**சத்தியஜீவியம் மேலும் பலவற்றைக் காணும்.**
**அவை மனத்தின் பார்வையிலில்லை.**
**ஆனால் அவற்றில் தவறு ஏற்படுவதில்லை.**
**குழம்பித் தடுமாறுவது அதற்கில்லை.**
**ஒவ்வொரு வாய்ப்பையும் அதனால் காண முடிகிறது.**
**அதற்குரிய அமைப்பில் அதைக் காண்கிறது.**
**அடிப்படையான தேவையையும், முறையான தொடர்பையும் அறிகிறது.**

**நேரம், காலம், சந்தர்ப்பம் சரியானது.**
**படிப்படியாக வளர்ந்து முடிவாகப் பலனடைவதை அது காணும்.**
**சத்தியஜீவியப் பார்வை நிதானமுடையது.**
**பார்ப்பதை முழுவதுமாகப் பார்ப்பது சத்தியஜீவியம்.**
**அது சத்தியஜீவியத்தின் சுபாவம்.**
**பிரபஞ்சத்தைக் கடந்தது என்பதால் அப்படி அமைந்துள்ளது.**
**அது மனத்திற்கு முடியாது.**

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அடுத்தவருடைய தொடர்பை அன்பானதாக மனிதன் மாற்ற முயல்கிறான். “ஆன்மாக்களுக்குள் தொடர்பு” எனில் “அன்பு” என்றாகும்.

***உணர்வு அன்பை அறியாது. அது ஆன்மாவுக்குரியது.***

# இம்மாதச் செய்தி

**பக்தன் சுந்தரராக விலகினாலும்**

**அன்னை சிவபெருமானாக நெருங்கி வருவதை**

**மரபு *கூறாமல் சன்னியாசம் கொள்* என்றது.**

**அந்நிலை திருவுருமாறுவது**

**வாழ்வில் அன்னை அற்புதமாக எழுவது.**



## அன்பர் கடிதம்

பகவான் ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை, குருநாதர் அவர்களை வணங்கி இக்கட்டுரையை எழுதுகிறேன்.

என் சித்திமூலம் 1991இல் மதர் பற்றி அறிந்துகொண்டேன். ஆனால் ஈடுபாடு இல்லை. Final year முடித்து, அன்னை தரிசனம் முடித்து வந்த பின்பு நான் எதிர்பாராதவிதமாக அந்த செமஸ்டரில் நிறைய மார்க் எடுத்து காலேஜில் இரண்டாமிடத்தில் வந்தேன்.

என் கணவரின் குடும்பமும், எங்கள் குடும்பமும் சிறு வயது முதல் (3 தலைமுறையாக) நண்பர்கள். எங்கள் இருவருக்கும் திருமணம் நிச்சயம் ஆனபொழுது அவர் வேலையில்லாமல் இருந்தார். சித்தியின் வீட்டில் "அன்னையின் தரிசனம்" படித்தேன். மதர் மேல் நம்பிக்கை ஏற்பட்டு 3 நாள் பிரார்த்தனை செய்தேன். அவரும் நவம்பர் 17ஆம் தேதி 1992இல் அன்னை தரிசனம் செய்தார். நான் நவம்பர் 24லிருந்து 26வரை பிரார்த்தனை செய்தேன். டிசம்பர் 1ஆம் தேதி அவர் வேலையில் சேர்ந்துவிட்டார். Foreign வேலைக்கு முயன்று கிட்டத்தட்ட 1¼ வருடம் வேலையில்லாமல் அன்னை தரிசனம் செய்த 10 நாட்களுக்குள் வேலை கிடைத்தது. இதன்மூலம் நான் அன்னையிடம் நெருங்கி வந்தேன்.

எங்களுக்கு 1996ஆம் ஆண்டு திருமணம் ஆனது. அப்பொழுது இவருக்கு severe ulcer. டாக்டரிடம் காட்டி ட்ரீட்மெண்ட் எடுத்து வந்தார். பாதி நாள் ஆபீஸ் போக முடியாது. வயிற்றுவலி, வாந்தி வந்துவிடும். ஒரு முறை இவர் ஆரோக்கியம் பற்றி சொசைட்டிக்குக் கடிதம் போட்ட பொழுது ஸ்ரீநிவாசா தெரு தியான மையம் அட்ரஸ் கொடுத்தனர். அதுதான் என் வாழ்க்கையில் திருப்புமுனையாக இருந்தது. அன்றே சென்டருக்குப் போய் பூவரசம்பூ வாங்கி வந்து 3 நாட்கள் பிரார்த்தனை செய்தேன். இவர் ஆரோக்கியம் முன்னேற்றமடைந்து நல்ல நிலைமைக்கு வந்தார்.

பிறகு இவர் ஆபீஸில் கம்பனி loss என்று கூறி கடைசியாகச் சேர்ந்த 3 பேரை திடீரென வேலையை விட்டுப் போகச் சொல்லிவிட்டனர். மதரிடம் வேண்டினேன். பழைய கம்பனியிலேயே வேலை கிடைத்தது.

திருமணம் ஆனபொழுது இவருக்குக் கல்யாணக் கடன் இருந்தது. அதனால் குழந்தை வேண்டாம் என்று தள்ளிப்போட்டோம். 1998இல் என் தங்கைக்கு திருமணம் ஆனது. உறவினர்கள், அம்மா, அப்பாவிற்காக சீக்கிரம் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாலும் எங்களுக்கு அது கூடிவரவில்லை; தள்ளிப்போயிற்று.

1998ஆம் ஆண்டு என் செயினை ஒருவன் அறுத்துக்கொண்டு போய் விட்டான். போலீஸில் புகார் கொடுத்தோம். 4 மாதத்திற்குள் செயின் கிடைத்துவிட்டது. ஸ்ரீ அன்னையின் அருளால்தான் இது கிடைத்தது. 1998ஆம் ஆண்டு ஜூலை இறுதியில் சென்டர் சர்வீஸுக்கு வந்தேன். 2 மாதத்திற்குள் செயின் கிடைத்தது. மேலும் எங்கள் வாழ்க்கைத்தரம் பிறகுதான் உயர்ந்தது. அதுவரை எங்கள் வீட்டில் மிக்ஸி, கிரைண்டர், B/W TV தவிர எதுவும் கிடையாது. பிறகு ஃபிரிட்ஜ், வாஷிங் மெஷின், கலர் டிவி, போன், கம்ப்யூட்டர், மியூசிக் சிஸ்டம் என்று எல்லாம் வாங்க முடிந்தது.

நாங்கள் பில் இல்லாமல் 9000 ரூபாய்க்கு wooden cot, kurlon bed வாங்கினோம். Guarantee Formஇல் கடையின் sealஉம் வாங்கவில்லை. 1 வருடம் முடியும் முன்பு பார்த்தால் பெட்டில் சின்ன சின்ன ஓட்டைகள் இருந்தது. புகார் செய்தோம். பிப்ரவரி 99இல் வாங்கியது. கம்பனி ஊழியர் வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டார். பில் இருந்தால் மாற்றிக் கொடுக்கலாம் என்றார். நாங்கள் தினமும் கணக்கு எழுதுவோம். அந்த டைரியை காட்டினேன். பிப்ரவரி 99இல் வாங்கியதற்கு இது தவிர என்னிடம் வேறு ஆதாரம் இல்லை என்று சொல்லிவிட்டேன். மார்ச் 17 ஆம் தேதி (தியான மையம் ஆரம்பித்த நாள்) அன்று கம்பனியிலிருந்து புது பெட் (நவீன தொழில்நுட்பத்துடன், அதிக விலை, புதிதாக உற்பத்தி செய்தது) கொடுத்துவிட்டு பழைய பெட்டை எடுத்துப் போனார்கள். இந்தியாவில் இது போல் 1 வருடம் உபயோகித்த பொருளை பில்கூட இல்லாமல் மாற்றிக் கொடுத்ததை நான் கேள்விப்பட்டதேயில்லை.

என் கணவர் தம் நண்பரின் பேச்சைக் கேட்டு அதிக சம்பளத்திற்கு அவர் கம்பனியில் சேர்ந்தார். சம்பளம் ஒழுங்காக வரவில்லை. ஒரே tension. மாம்பலம் சென்டரில் ஆலோசனை கேட்டு, அங்குக் கூறியபடி பிரார்த்தனை செய்தோம். 15ஆம் நாள் பழைய கம்பனி எம்.டி. தானே



போன் செய்து “மறுபடியும் வேலையில் சேர்கிறாயா?” என்றார். 3 மாதம்தான் நண்பரின் கம்பனியில் இருந்தார். பழைய வேலையை விடும் பொழுது 5000 ரூபாய் சம்பளம். மறுபடியும் வேலையில் சேரும்பொழுது 10,000 ரூபாய் ஆனது. இது அன்னையின் அருளால்தான் நடந்தது.

நானும் குழந்தைக்காக டாக்டரிடம் போய் ட்ரீட்மெண்ட் எடுத்துக் கொண்டேன். ஜூலை 4ஆம் தேதி நாங்கள் இருவரும் சொசைட்டிக்கு போனோம். அங்கு கூறியபடி hourly consecration, மற்றும் Token Actஐ ஏற்றுக் கொண்டேன். மார்ச் மாதம் ஒரு அன்பர் prayer for a child என்று ஒரு prayer எழுதிக் கொடுத்தார். தினமும் காலையில் 15 நிமிடம் பிரார்த்தனை செய்து வந்தோம். ஆகஸ்ட் 4ஆம் தேதிக்குள் விஷயம் கூடிவந்தது. 6 வருடம் குழந்தையில்லாமல் இப்பொழுது conceiveஆனதால் ஓய்வில் இருக்கிறேன். அன்னையின் அருளால் குழந்தை நல்லபடியாக பிறக்க வேண்டும் என்று வேண்டி வருகிறேன்.

இது தவிர ஸ்ரீ அன்னையின் அருளால் எங்கள் உறவினர்களுக்கு பல நன்மைகள் நடந்துள்ளன. என் பெரிய நாத்தனாரின் பெண்ணுக்கு உடலில் இரத்தத்தில் ஏதோ பிரச்சினை; liver மோசமாக உள்ளது என்று ட்ரீட்மெண்ட் எடுத்து, நிறைய மருந்து சாப்பிட்டார். மதரிடம் வந்த பிறகு எல்லாவற்றையும் நிறுத்திவிட்டு தியானத்தின் மூலமே அவர் வியாதி சரியானது. அவளுக்குத் திருமணம் செய்ய முடியுமா என்று நினைத்தோம். அவளுக்குப் பாண்டியிலேயே அன்னை முறைப்படி திருமணம் முடிந்து, அவளும் இப்பொழுது conceiveஆகியிருக்கிறாள்.

என் கடைசி நாத்தனாருக்கு 4 வருடம் முன்பு brain tumour வந்து ஆபரேஷன் செய்து கேன்சர் என்று 1 மாதம் ரேடியேஷன் ட்ரீட்மெண்ட் கொடுத்தார்கள். 1 மாதம் முடிந்து C.T. scan செய்ததில் தலையில் பல இடங்களில் பரவிவிட்டது என்றும் 1 வருடம் இருந்தாலே அதிகம் என்று ட்ரீட்மெண்டை நிறுத்திவிட்டனர். இப்பொழுது 4 வருடங்கள் ஆகிறது. எந்தப் பிரச்சினையுமின்றி இன்று நலமாக இருக்கிறார். அவர் இப்பொழுது சொந்த பிளாட் வாங்கி கணவருடன் சந்தோஷமாக இருக்கிறார்.

எங்கள் குடும்பத்தில் அனைவரும் ஸ்ரீ அன்னையை ஏற்றுக் கொண்டுள்ளனர். மாம்பலம் தியான மையத்தினால்தான் மதரைப் புரிந்து

கொண்டு அன்னையின் அருளைப் பெற முடிந்தது. சொசைட்டி புக்ஸ்தான் வழிகாட்டி. மேலும் நாங்கள் வாழ்க்கையில் முன்னேறி, நல்ல நிலைமைக்கு வருவதற்கு ஸ்ரீ அன்னையை வேண்டுகிறோம்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**நினைவழிந்தால் ஆர்வமெழும். நாலு பேர் சொல்வதையும், நாம் நினைப்பதையும் இழந்தால் எழுந்த ஆர்வம் பூர்த்தியாகும்.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நல்லது செய்ய முனைவதில் நல்லதைவிட முனைப்பு அதிகம் இருப்பதால் அது தேவையில்லை.

***நல்லதைச் செய்யும் முனைப்பும் முனைப்பாகும்.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

கண்மூடிச் செயல்படும் சக்தியைத் தன்னை உணரச் செய்வதே ஒருநிலைப்படுதல் என்று பூரணயோகத்தில் கொள்ளப்படும். விழித்தெழுந்த சக்தி, ஜீவனின் மையத்திலுள்ள ஒளியை நாடுவது சமர்ப்பணம்.

***சக்தி விழித்து, ஜீவஜோதியை நாடுவது சமர்ப்பணம்.***

***விழித்தெழுந்த சக்தி, ஜீவனின் மையத்திலுள்ள ஒளியை நாடுவது சமர்ப்பணம்.***



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**16. எதைச் செய்தாலும் அதில் நம் நல்ல அம்சங்கள் முழுவதும் வெளிப்படும்படிச் செய்வது (to positively exhaust yourself).**

வேலையைக் கடமையாகச் செய்யலாம்.

அதையே தலையாய கடனாக ஏற்றுச் செய்யலாம்.

ஆர்வமாக வேலையை ஏற்று, அற்புதமாகப் பூர்த்தி செய்யலாம்.

நாம் செய்யும் வேலை நம் ஸ்தாபனத்திற்கு நல்ல பலன் தர வேண்டும் என்று நினைத்துச் செய்யலாம்.

நமது நல்லெண்ணம் ஸ்தாபனத்திற்குப் பலிக்கும்படியும், வேலைக்குப் பலிக்கும்படியும், அன்னைக்குத் திருப்தி ஏற்படும்படியும் செய்யலாம்.

(Thoughtfulness) யோசனையாக வேலையை ஏற்றுப் பொறுப்பாகச் செய்யலாம்.

(Resourcefulness) இந்த வேலையை எவ்வளவு சாதுர்யமாகவும், சாமர்த்தியமாகவும் செய்ய முடியுமோ அப்படிச் செய்யலாம்.

நமக்குத் திறமை, பொறுப்பு, ஆர்வம், நல்லெண்ணம், தீவிர யோசனை, சாமர்த்தியம், சாதுர்யம், சமயோசிதம்எனப் பல நல்ல அம்சங்கள் உள்ளன. இதுபோன்ற நல்ல அம்சங்கள் முழுவதும் செயல்படும்படி வேலையைச் செய்தால், அங்கு அன்னை நிதர்சனமாவார்.

❀ பசுமைப் புரட்சி என்பது உலகில் முதலில் இந்தியாவில் ஏற்பட்டது. நாடு உணவு உற்பத்தியைத் தானே செய்ய வேண்டும்என எவரும் அதுவரை கூறவில்லை.

அந்தக் கருத்தை முன்வைக்க சுப்ரமணியம் முன்வந்தார்.

உணவு தானியம் விலை குறையக்கூடாதுஎன்று நினைக்க எவருக்கும் தோன்றவில்லை.

அதையும் அவர் செய்தார்.

உரம், விதை, பூச்சிமருந்து ஆகிய தேவைகளையும் பூர்த்தி செய்ய முனைந்தார்.

அதுவரை ராஜேந்திரப் பிரசாத், ராஜாஜி, ஜகஜீவன் ராம் உணவு மந்திரியாக இருந்தனர். இவை அவர்களெல்லாம் செய்யாதன.

கடமை எனக் கருதினால், இவை கடமையாகா.

அறிவு, ஆர்வம், தேசபக்தி, பொறுப்பு, முன்யோசனை ஆகியவை வெளிப்பட சுப்ரமணியம் செய்தது பசுமைப் புரட்சி.

❀ குரியன் அதே போன்ற வேலையை மந்திரி பதவியின்றி, ஒரு இன்ஜினீயராக இருந்து செய்தார்.

ஆனந்த் வெற்றி பெற்றது.

அவருக்கு வெளியில் 5 இலட்சம் ரூபாய் மாதச் சம்பளம் பெறும் நிலையிருந்த பொழுது, தியாக மனப்பான்மையால் 5 ஆயிரம் ரூபாய் பெற்றுச் சேவை செய்தார்.

இன்று அவர் 168 விருதுகள் பெற்றுள்ளார்.

உலகப் பிரசித்தி பெற்றார்.

இதைச் செய்யும் பொழுது அரசியல்வாதிகள், அதிகாரிகள், பொது மக்கள் எதிர்ப்பை ஏற்றுச் செய்தார்.

மேற்சொன்ன கருத்தை இது போன்ற விஷயங்கள் விளக்கும்.

நல்ல அம்சங்கள் ஏராளம்.

அவற்றின் எல்லைக்கு அளவில்லை.

அவை தீரும்படி வேலை செய்ய பரந்த மனம் தேவை.

அதைப் பூர்த்தி செய்ய ஆர்வம் மிகுந்த உறுதி தேவை.

தளராத நெஞ்சம் தாராளமாகத் தேவை.

அவை மனித சுபாவத்தின் எல்லைக்கு நம்மை அழைத்துச் செல்லும்.

எல்லையைக் கடந்தால் தெய்வ தரிசனம் உண்டு.

**செய்யும் செயலைவிடச் செய்யும் மனப்பான்மை முக்கியம்.**

நல்ல அம்சம் தீர்ந்தால், தெய்வ அம்சம் செயல்படும்.



**17. செயலற்றிருப்பதே சிறந்த செயல் என அறிவது.**

வாழ்வு செயலாலானது.

வாழ்வை, செயல் எனவே கூறலாம்.

செயல் என்பது உழைப்பு.

உடல் உழைக்கிறது.

உடலால் உழைப்பவனை உழைப்பாளி என்கிறோம்.

அவனுக்குரியது கூலி.

**கம்பெனி எவ்வளவு சம்பாதித்தாலும், அவனுக்குரிய கூலி உயர்ந்தால் நிலை உயராது, கூலி உயரும்.**

கூலி வேலை செய்தவன் திறமை பெற்றால் மேஸ்த்திரியாவான்.

மேஸ்த்திரி வேலை செய்வதில்லை.

வேலை செய்பவரை மேய்ப்பான்.

இது ஒரு படி உயருவது.

இன்று தொழிலாளி சூப்பர்வைசராகிறான்.

அன்று - 10,000 ஆண்டுகட்கு முன் - அனைவரும் தொழிலாளி.

உலகம் முன்னேறி, கொஞ்சம் பேர் சூப்பர்வைசரானார்கள்.

சூப்பர்வைசர் உடலால் உழைப்பவனைக் கண்காணித்தால், மேனேஜர் அறிவால் உழைப்பவனை நிர்வாகம் செய்கிறார்.

கம்பனியை ஆரம்பித்த முதலாளி அடியிலிருந்து ஒவ்வொரு படியாக உயர்ந்து மேனேஜரிடம் நிர்வாகத்தை அளித்து, அதற்குரிய policies சட்டங்களை இயற்றுபவராகிறார்.

சட்டங்களை ஏற்படுத்தி, பொறுப்பேற்று, உழைப்பையும், வேலையையும், நிர்வாகத்தையும் முதலாளி கடந்து வருகிறார்.

பொறுப்பு பாரம்.

பாரத்தை rules சட்டங்களிடம் ஒப்படைக்கலாம்.

பொறுப்பின் பாரத்தை (faith) நம்பிக்கையிடம் தரலாம்.

எப்படிச் செய்தாலும் உழைப்பு, வேலையாகி, நிர்வாகமாக உயர்ந்து, பொறுப்பாகி, நம்பிக்கையாக மாறுவது தொழிலாளி மனத்தால் முதலாளி ஆவது.

டாட்டா நிர்வாகத்தில் 93 கம்பனிகள் உண்டு.

அவை இப்படி நிர்வாகம் செய்யப்படுகின்றன.

**பொறுப்பு பாரமில்லாமலிருக்க பர்சனாலிட்டி பெரியதாக இருக்க வேண்டும்.**
பொறுப்பு பாரம் தாராமலிருக்க நிர்வாகம் சிறப்பாகவோ, நம்பிக்கை அன்னை மீதோ இருக்க வேண்டும்.

அந்நிலையில் அவர் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

அது அவரைப்பொருத்தவரை செயலற்ற நிலை.

செயலற்ற நிலையில் செயலுக்குரிய சக்தி அபாரமாக உள்ளிருந்து எழும்.

அப்படியிருப்பது ஒரு செயல்.

அது சிறந்த செயல்.

அவரது நிர்வாகம் அப்பழுக்கற்றிருக்கும்.

நம் மனநிலை இக்கட்டங்களைக் கடந்து செயலற்றிருப்பது சிறந்த நிலை.

சிறந்த நிலை உயர்ந்த செயல்.

இம்முறை ஒருவருக்கு முடியுமானால், அவர் எண்ணம் சிறப்பாக நிறைவேறும்.

சிறு செயல் பெரும்பலன் தரும்.

செயலேயின்றியும் பலன் தரும் வாய்ப்புண்டு.

செயல் உயர்ந்து, சிறந்து, செறிந்து தானே பலிக்கும் முறை இது.

## 18. செயலின் பின்னாலுள்ள மௌனத்தை எட்டுவது.

மௌனமே இறைவன்.

சாந்தியே இறைவன்.

ஜோதியே இறைவன்என நாம் கூறுகிறோம்.

ஏனெனில் நமக்கு இறைவன்என்பது பரமாத்மா - ஆத்மாவாகும்.

அனந்தம், காலத்தைக் கடந்த நிலை, ஐக்கியம், சத்தியம், நன்மை, ஞானம், சக்தி, அழகு, அன்பு, சந்தோஷம், மௌனம், சாந்தி ஆகியவை ஆத்மாவின் அம்சங்கள்.

நாம் மனத்தால் அல்லது உணர்வால் அல்லது உடலால் செயல்படுகிறோம்.

ஆத்மாவால் செயல்படுவது சிறப்பு.



எப்படி ஆத்மாவால் செயல்படுவது?

ஒருவரைச் சந்தித்தால், அவரைப் பற்றிச் சிந்தித்தால் அவர் புரிவார்.

இவர் உயரமானவர், நல்லவர், அடக்கமானவர், அந்தஸ்துள்ளவர் எனப் புரிவது மனத்தால் அவரை அறிவதாகும்.

அவரைக் கண்டவுடன் பிடித்துவிட்டால் உணர்வால் செயல்படுவதாகும்.

சிந்திக்காமல், உணராமலிருந்தால் மௌனம் எழும். அவர் முகம் பிரகாசமாகத் தெரியும். அவர் உள்ளத்தில் ஆத்மாவின் அம்சம் ஒன்று தெரியும். மௌனமாகப் பார்த்தால் அவரிடம் உள்ள மௌனம் தெரியும்.

பார்த்தவுடன் சிரிக்கிறோம், விசாரிக்கிறோம், சந்தோஷப்படுகிறோம் என்றால் அது உறவு. உறவில் நாம் மௌனத்தை மறந்துவிடுகிறோம்.

மீண்டும் அவரைச் சந்திக்கும் பொழுது மௌனமாக இருந்தால் அவரிடம் மௌனம் உண்டு, இல்லைஎனத் தெரியும்.

**அல்லது அவர் போனபின் அவரைச் சந்தித்ததை நினைவுகூர்ந்தால் நம் சந்திப்பின் பின்னால் உள்ள மௌனம் தெரியும்.**

நாம் எந்த வேலை செய்தாலும், அந்த வேலையில் நாம் நம்மை மறந்து விடுகிறோம்.

அப்பொழுது வேலை தெரிகிறது; வேலையை எப்படிச் செய்தோம், அதன் நிறைவு என்ன, குறைவு என்னஎன நாம் அறிவோம்.

வேலையை மறந்து உள்ளே போனால் வேலை தானே நடக்கும்.

வேலையின் பின்னால் உள்ள மௌனம் தெரியும்.

மௌனம் தெரிவதுபோல் மேலே சொன்ன 12 அம்சங்களில் ஒன்று தெரியும்.

மனம் குவிந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்கள் தெரியும்.

மனம் உள்ளேயுள்ள ஆத்மாவில் குவிந்து அடங்கினால் வெளியில் வேலை-யில் உள்ள ஆத்மா தெரியும்.

உள்ளே போய் ஆத்மாவைக் கடந்த அன்னை தெரிந்தால் வேலையில் உள்ள அன்னை தெரியும்.

The Life Divine படிக்கும் பொழுது இதைப் பயின்றால் புத்தகத்தில் பகவான்

உருவம் பவித்திரமாகத் தெரியும்.

Blessing Packet தபாலில் வந்தது. வயதானவர் ஆப்பரேஷனுக்காக Blessing Packetஐக் கேட்டிருந்தார்.

பாக்கட்டைப் பிரித்து உள்ளேயுள்ள புஷ்பத்தை எடுத்தால், அதன் மீது ஒரு துளி ரத்தம் குதத்தில் தெரிந்தது. பௌத்திரம் (piles) ஆப்பரேஷன்.

அன்பர் கண்டது patientக்குரிய அன்னை!

**19. மௌனத்தின் பின்னால் உள்ள மௌனத்தைக் காண்பது.**
**Silence behind Silence.**

உலகில் ஆன்மீகம் மௌனமாக வெளிப்படும்.

மௌனத்தின் பின்னாலுள்ள மௌனம் சிருஷ்டியில் ஆன்மீகம் செயல்படும் வகை.

சிந்தனையற்ற நிலை மௌனம் மனத்தில் எழும் நிலை.

உலகை அறியும் அவா மனத்தினுடையது.

உலகை அறிவால் தழுவி உணர விரும்பாதவன் மனம் மௌனமாகும்.

ஓடும் எண்ணம் நிற்பதும், சிந்தனையழிவதும், மனம் புரிய விழைவது மறைவதும் மனத்தில் மௌனத்தின் பல நிலைகள்.

ஜடம், உணர்வு பெற்று, அறிவு பெற்றதால் மனம்என்ற கருவி ஏற்பட்டது.

அதற்கு முன் மனம் சிருஷ்டிக்கப்படவில்லை.

மனம் யோகத்தால் பகவானுக்கும், அன்னைக்கும் அழிந்தது.

மனம் அழிவது என்றால் மனம் ஏற்படுமுன் இருந்த நிலை மனம் ஏற்பட்டு செயல்படாமலிருக்கும் நிலையை எய்துவது.

பதவி வருமுன் அதிகாரமில்லை.

பதவி வந்தபின் அதிகாரம் உண்டு.

பதவி அதிகாரத்தை அளித்தபின் அதிகாரத்தைச் செலுத்தாவிட்டால் ஏற்படுவது அடக்கம்.

உள்ள திறமையைச் செயல்படுத்தாத அடக்கம் மௌனத்தை உற்பத்தி செய்யும்.



கருவியிருந்து திறமையைச் செயல்படுத்தாதது முதல் நிலை.

கருவியில்லாததுபோன்ற நிலை ஏற்படுவது இரண்டாம் நிலை.

முதல் நிலைக்குரியது மௌனம்.

இரண்டாம் நிலைக்குரிய மௌனம், மௌனத்தின் பின்னுள்ள மௌனம்.

மௌனம் சக்தியை எழுப்பும்.

உலகில் செயல்படத் தேவையான சக்தியது.

அது பகுதியான செயல் என்பதால் அந்த மௌனம் பகுதியானது.

முழுமையான செயல் காலத்தைக் கடந்தது.

காலத்தையும், கடந்ததையும் கடந்துள்ள நிலைக்குரியது மௌனத்தின் பின்னுள்ள மௌனம்.

செயலற்றுப் போகும் நிலையில் எழுவது மௌனம்.

அம்மௌனம் செயலால் கலையும்.

**மௌனம் கலையாமல் செய்யும் செயல் மௌனத்தின் பின்னுள்ள மௌனத்தை எழுப்பும்.**

மௌனம் உற்பத்தியைப் பெருக்கும் (productivity).

உலகில் அதிக உற்பத்தியுள்ள நாடுகளில் மௌனம் (physical silence) உண்டு.

மௌனத்தின் பின்னாலுள்ள மௌனம் சிருஷ்டிக்கும் (creative).

உலகில் புதியது எது எழவேண்டுமானாலும் அது மௌனம் உள்ள நாடுகளில் எழும்.

ஆன்மீகத்தில் புதியது எழவேண்டுமானால் அது மௌனத்தின் பின்னாலுள்ள மௌனத்தில் எழும். இந்திய விடுதலை போராட்டமின்றி எழுந்து, 45 நாடுகட்கு விடுதலையளித்த வினோதம் அம்மௌனத்திற்கு உரியது.

*தொடரும்....*

❀❀❀

# அமெரிக்காவின் முன்னேற்றத்திலிருந்து இந்தியர்களாகிய நாம் அறிந்துகொள்ள வேண்டியது

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

N. அசோகன்

**2. இப்பொழுது முன்னேற்றத்திற்குப் பணம் மற்றும் டெக்னாலஜியைவிட ஆர்கனைஷேஷன்தான் முக்கியமென்ற கருத்தைப் பார்ப்போம்:**

இந்தியர்களிடம் இந்தியாவின் முன்னேற்றத்தை விரைவுபடுத்த உடனடியாக என்னதேவை என்று கேட்டால் அநேகமாகப் பெரும்பாலோர் நிறைய முதலீடும், நவீன டெக்னாலஜியும் இருந்தால் 20 வருடங்களில் அமெரிக்காவை எட்டிப்பிடித்துவிடலாம் என்றுதான் சொல்வார்கள். 10 ஐந்தாண்டு திட்டங்கள் தீட்டப்பட்டு, கோடிக்கணக்கில் பணம் செலவிடப்பட்டுள்ளது. இப்பொழுது நடக்கின்ற 10ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் 16,00,000 கோடி செலவிடத் தீர்மானித்துள்ளார்கள். இதற்கு முன் அமுல்படுத்தப்பட்ட 9 ஐந்தாண்டு திட்டங்களிலும் சேர்த்து கிட்டத்தட்ட இதே அளவிற்கு 16,00,000 கோடி ரூபாய் செலவாகியுள்ளது. இவ்வளவு செலவாகியபின்பும் நாம் எதிர்பார்த்த முன்னேற்றம் வந்துள்ளதா என்றுகேட்டால் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏன் வரவில்லைஎன்று கேள்வி எழுப்பினால் அங்கேதான் organisationனுடைய அருமையே நமக்குப் புரிய வருகிறது. ஆர்கனைஷேஷன் என்றால் திட்டமிட்ட, முறைபடுத்தப்பட்ட செயல்பாடு என்றர்த்தமாகும். ஆங்கிலத்தில் சொன்னால் systematic coordinated action என்று சொல்லலாம்.

நம்முடைய வாழ்க்கையில் பலவிடங்களில் திட்டமிட்ட, முறையான மற்றும் systematic செயல்பாடுகளைக் கொண்டு வந்துள்ளோம். உதாரணமாக traffic movementsஐ எடுத்துக் கொள்ளுங்கள். Traffic signals



மற்றும் போலீஸ்காரர்களை வைத்து நாம் trafficஐக் கட்டுப்படுத்தாவிட்டால், முறைப்படுத்தாவிட்டால், traffic movementsஇல் எவ்வளவு குழப்பம் வரும் என்று நினைத்துப் பாருங்கள். பள்ளிகளில் attendance register, time-table, working hours மற்றும் பரிட்சைகள் இல்லாமல் போனால் பள்ளியை ஒழுங்காக நடத்தவே முடியாதுஎன்று தெரிகிறது. கம்பெனிகளிலும், தொழிற்சாலைகளிலும் production, விற்பனை, அக்கௌண்ட்ஸ், ஸ்டாக் மற்றும் financeஎன்று பல பிரிவுகளிருக்கும். இப்பிரிவுகளுக்கிடையே முறையான coordination இல்லாமல் ஒரு கம்பெனி செயல்பட்டால் அக்கம்பெனியால் லாபகரமாகச் செயல்பட முடியாதுஎன்று நமக்குத் தெரிகிறது. விற்பனைக்கு ஏற்றபடி உற்பத்தி இருக்கவேண்டும். உற்பத்திக்கு ஏற்றபடி stock இருக்கவேண்டும். இது சம்பந்தமான வரவு செலவுகளை அக்கௌண்ட்ஸ் பிரிவினர் updateஆக வைத்திருக்க வேண்டும். செலவிற்குத் தேவையான பணத்தை finance பிரிவில் ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த coordination இல்லாமல், விற்பனை குறைவாக உள்ளபொழுது உற்பத்தியை அதிகரித்தாலோ, உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நேரத்தில் stock குறைந்தாலோ, என்ன வருமானம் வருகிறது, என்ன செலவாகிறதுஎன்று அக்கௌண்ட்ஸ் பிரிவில் கணக்கில்லை என்றாலோ, செலவிற்கேற்ற நிதிவசதி finance பிரிவில் இல்லை-யென்றாலோ, கஸ்டமர் கேட்கிற qualityஐ productionஇல் கொடுக்க முடியவில்லை என்றாலோ, அங்கே organisation இருக்காது; வேலை கெட்டுவிடும்; லாபமென்பதைப் பார்க்க முடியாது.

ஆகவே பணம், டெக்னாலஜி இருந்தால் மட்டும் போதும்; வேலை நடக்கும் என்று சொல்ல முடியாது. ஆர்கனைஷேஷன் இருந்தால்தான் முறையானவொரு coordination இருக்கும்; எதிர்பார்த்த பலனும் கிடைக்கும். நம்மிடம் நிறைய எனர்ஜி இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் சாதிக்க வேண்டுமென்ற நோக்கம் இருக்கும்பொழுது அந்த எனர்ஜிக்கு ஒரு direction கிடைக்கிறது. அப்பட்சத்தில் அந்த எனர்ஜி ஒரு forceஆக மாறுகிறது. நம்மிடம் systematic செயல்பாடு இருக்கும் பொழுது அந்த force ஒரு productive powerஆக மாறி நமக்கு

நல்ல பலன் கொடுக்கிறது. ஒரு கம்பெனியில் ஊழியர்கள் வேலை செய்கிறார்கள், முதலாளி முதலீடு செய்கிறார். ஊழியர்களின் உழைப்பும் முதலாளியின் முதலீடும் லாபமென்ற பலனாக மாறவேண்டும். அந்நிறுவனத்தின் செயல்பாட்டில் நாம் எதிர்பார்க்கும் ஆர்கனைஷேஷன் மற்றும் coordination இருக்கும்பட்சத்தில் அந்த உழைப்பும், முதலீடும் வருமானம் மற்றும் லாபமாக மாறும். அதன் பலனாக, கம்பெனி வளரும். மாறாக, கம்பெனி systematicஆகச் செயல்படவில்லை, அங்கே coordination இல்லை என்றால், உழைப்பும், முதலீடும் வீணாகின்றன. வருமானமும், லாபமும் வாராமல் நஷ்டம்தான் வருகின்றது. ஆகவே ஆர்கனை-ஷேஷன்தான் நம்முடைய எனர்ஜியை விரயமாகவிடாமல் productive powerஆக மாற்றி நல்ல பலனாக மாற்றித் தருகிறது.

நம்முடைய சொந்த வாழ்க்கையிலும், நம்முடைய அன்றாட வேலையிலும் நாம் ஸிஸ்டமாட்டிக்காக செயல்பட ஓரளவு கற்றுக் கொண்டுள்ளோம். ஆனால் தேசிய அளவில் முன்னேற்றத்தைக் கொண்டுவர முயலும்பொழுது நமக்கு systematicஆக செயல்படத் தெரியவில்லை. அதனால் நம் வளர்ச்சி தாமதமாகிறது; பணம் விரயமாகிறது. Town-planningஐ எடுத்துக் கொள்ளுங்கள். இந்தவொரு விஷயத்திலேயே நம்மிடம் organisation எவ்வளவு குறைவாகவுள்ளது என்று பார்த்துவிடலாம். Approval இல்லாமல் வீடு கட்டுவது, தாழ்ந்த பகுதிகளில் வீடுகட்டிக் கொள்வது, water pipe, drainage pipe, electric மற்றும் telephone cable போட வீதிகளில் அடிக்கடி பள்ளம் பண்ணுவது, demandற்கு ஏற்றபடி மின் supply கொடுக்க முடியாமல் அடிக்கடி power-cutஐக் கொண்டு வருவது, மழைக்காலங்களில் மழைநீர் வடிய வழி இல்லாமல் தாழ்ந்த இடங்களில் எல்லாம் வெள்ளம் வந்து வீடுகளில் தண்ணீர் புகுந்து மக்கள் வெளியேறுவது, சாலைகள் குறுகலாக இருப்பதால் traffic நெரிசல் வருவது என்ற இவையெல்லாம் நம்மிடம் proper town-planningகூட இல்லையென்பதைக் காட்டுகிறது. அமெரிக்காவில் உள்ள நகரங்களில் இத்தகைய குறைபாடுகளை பார்க்கவே முடியாது. விசாலமான சாலைகள், water pipe, drainage pipe, electric cable, telephone cable approval



என்று எல்லாம் வந்த பிறகுதான் township அங்கே உருவாகும். இங்கே வீடு முதலில் வந்துவிடுகிறது. பின்புதான் வீதியும் மற்றெல்லாம் வருகின்றன. இத்தகைய செயல்பாடு organisation தலைகீழாக இருப்பதைக் காட்டுகிறது.

Town planningஇலேயே இவ்வளவு குறைபாடுகள் என்றால், தேசிய முன்னேற்றம்என்ற பெரிய வேலையை எடுத்துக்கொண்டால் நம்முடைய செயல்பாட்டில் இன்னும் எவ்வளவு பெரிய குறைகளிருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். முதலிரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் பல கோடிகளைச் செலவு செய்து heavy industriesஐ உருவாக்கினார்கள். பல்லாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும் என்று எதிர்பார்த்தபொழுது ஒரு சிலவாயிரம் பேருக்குத்தான் வேலை கிடைத்தது. கோடிக்கணக்காகச் செலவு செய்தும் ஒரு சிலவாயிரம் பேருக்குத்தான் வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது என்பதைப் பார்த்த பொழுது நேருஜீ அவர்களுக்குப் பெரிய ஏமாற்றம் வந்தது.

அமெரிக்கா நம் நாட்டைவிட மூன்று மடங்கு பரப்பளவு அதிகம் கொண்ட நாடாகும். ஆனால் அங்கே மக்கள்தொகை 30 கோடிதான். அமெரிக்காவின் பரப்பளவில் மூன்றிலொரு பங்கேவுள்ள நம் நாட்டில் 2005ஆமாண்டில் 110 கோடியாக மக்கள்தொகை பெருகியுள்ளது. பரப்பளவு மும்மடங்கு குறைவு, ஆனால் மக்கள்தொகை மும்மடங்கு அதிகமென்றால் ஒட்டுமொத்தமாக 9 மடங்கு மக்கள்தொகை அதிகமாக உள்ளது என்றர்த்தமாகிறது. ஒன்று, நம் நாட்டின் வருமானத்திற்கேற்ற அளவிற்கு மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அல்லது, மக்கள்தொகைக்கு ஏற்றபடி வருமானத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும். இரண்டுமில்லாமல் வருமானம் குறைவாகவும், மக்கள்தொகை அதிகமாகவுமிருப்பது நம்முடைய வருமானத்திற்கும், நமக்குள்ள மக்கள் தொகைக்கும் சரியான coordination இல்லை என்பதைக் காட்டுகிறது.

பசுமைப் புரட்சி திட்டத்தைத்தான் நம் நாட்டில் முதல்முறையாக வெற்றிகரமாக அமுல்படுத்தினார்கள். அதற்குக் காரணம் அத்திட்டத்தில்

இருக்கவேண்டிய organisationஉம் systematic செயல்பாடுமிருந்தன. நெல் மற்றும் கோதுமை விளைச்சலை உயர்த்த I.R.8 போன்ற புது ரக நெற்பயிர்களை அறிமுகப்படுத்திய பொழுது, விலை இறங்கிவிடும் என்று விவசாயிகள் பயந்தார்கள். அச்சமயம் விவசாயத்துறை அமைச்சராக இருந்த C.சுப்பிரமணியம் அவர்கள் minimum floor price ஒன்றை வழங்கினார். வரப்போகின்ற கூடுதல் மகசூலை வைப்பதற்கு godownகளை நிறுவினார். விவசாயிகளுக்கு வேண்டிய கூடுதல் உரம், பூச்சிமருந்து, விதை ஆகியவை கிடைக்க வழி செய்தார். இவ்வேலைகளை எல்லாம் செய்வதற்கு Food Corporation of India என்றவொரு புதிய ஸ்தாபனத்தையே நிறுவினார். அவருக்கிருந்த அந்த organisational sense இந்திய அரசியல்வாதிகளைப்பொருத்தவரை மிகவும் அபூர்வமான பொக்கிஷமாகும். பசுமைப் புரட்சி வெற்றிகரமாக நிகழ்ந்ததைப் போலவே பால் உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் கொண்டுவந்த வெண்மைப் புரட்சியும் வெற்றியடைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணகர்த்தா குஜராத்தில் Anand Dairy Cooperativeஐத் துவக்கி வைத்த Verghese Kurien ஆவார். நாடெங்கிலும் பரவிய Milk Cooperativeகளின் மூலம் வெண்மைப் புரட்சியையும் வெற்றிகரமாக நம் நாடு சாதித்துள்ளது. இன்று பால் உற்பத்தியில் உலகத்தில் நம் நாடு முதலிடம் வகிக்கிறது.

பசுமைப் புரட்சியையும், வெண்மைப் புரட்சியையும் வெற்றிகரமாக சாதித்த நம் நாடு தொழிற்புரட்சிக்குச் சரியான அணுகுமுறையை கையாண்டால் அதிலும் வெற்றி காணலாம். நம் நாட்டு இளைஞர்கள் employmentஇல் கிடைக்கும் securityஐத்தான் நாடுகிறார்களேவொழிய சொந்தமாகத் தொழில் செய்ய முன்வருவதில்லை. ஆனால், Self-employmentஇல் பெருவருமானம் காத்திருக்கின்றது. Self-employmentஇல் இறங்கவேண்டும் என்றால் அதற்குண்டான riskஐ எடுக்க வேண்டும். அந்த riskஐ எடுப்பவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கின்றது.

அமெரிக்காவில் யாரும் அரசாங்க உத்யோகத்தையோ, அதில் கிடைக்கும் securityஐயோ பெரிதாகக் கருதுவதில்லை. சுயதொழில்,



enterprise என்றுதான் செல்கின்றனர். சொந்தமாகச் சாதிக்க முடியாதவர் தான் வேறு வழியில்லாமல் அரசாங்கப் பணிக்கு அங்கே செல்கின்றனர். ஆனால் இங்கே அரசாங்கப் பணிக்குத்தான் முதலிடம் என்ற மனோபாவம் நிலவிவருகின்றது.

Self-employmentஐ ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் training courseஎல்லாம் நடத்துகிறது. 100 பேர் course ற்கு வந்தால் ஏதோவிரண்டு பேர்தான் உண்மையில் self-employmentஇல் இறங்குகின்றனர். அமெரிக்கர்களுக்கு இயற்கையாக வருவது இங்கே நமக்கு சொல்லிக் கொடுத்தாலும் வருவதில்லை. நம் மனநிலை மாறி நம் நாட்டு இளைஞர்களும் தொழில்முனைவர்களாக தலையெடுத்தால் நம் நாட்டிலும் செல்வவளம் பெருகி அடுத்த 20 வருடங்களில் நாமும் அமெரிக்காவிற்கு நிகரானவர்கள் ஆவோம்.

இன்று அமெரிக்கா பெரிய corporationகளும், பெரும் பணக்காரர்களும், பெரிய high-rise buildingsஉம் நிரம்பிய நாடாக காட்சியளிப்பதால் பெரிய முதலீடு கிடைத்தால் நம் நாட்டையும் இப்படி மாற்றலாம்என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால் பெரிய முதலீட்டைப் போட்டு அமெரிக்கர்கள் இந்த முன்னேற்றத்தைக் கொண்டு வரவில்லை. மூன்று நூற்றாண்டுகளாக அவர்கள் வெளிப்படுத்திய கடினவுழைப்பு, திறமை, systematic செயல்பாடு மற்றும் value-implementationஉடைய இறுதி பலனிது. பலனைக் காரணமாக நாம் நினைப்பது விஷயத்தைத் தலைகீழாகப் புரிந்து கொள்வதாகும். 17-ஆம் நூற்றாண்டில் அங்கு குடியேறியவர்கள் பெரிய முதலீட்டை நம்பி அங்குச் செல்லவில்லை. தம்முடைய உடலுழைப்பை நம்பித்தான் அங்குச் சென்றார்கள். 30 அல்லது 40 தலைமுறைகளாக அவர்கள் ஈட்டிய வருமானமும், அதிலிருந்து வந்த சேமிப்பும்தான் இன்று பெரிய முதலீடாக நமக்குக் காட்சியளிக்கிறது.

அந்த உழைப்பையும், திறமையையும், systematic செயல்பாட்டையும் நாம் வளர்த்துக் கொள்ளாமல் பெருமுதலீட்டிற்காகக் காத்திருப்பது வீண்வேலை. அப்படியே பெரிய முதலீடு கடனாகக் கிடைத்தாலும்

அதற்குண்டான முழுப்பலனை நாம் அவ்வளவு சுலபமாகப் பார்க்க முடியாது; நிறைய விரயமாகும். அவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்றால் அமெரிக்கர்களுடைய திறமையும், செயல் நேர்த்தியும் நமக்கும் வரவேண்டும்.

**3. சுதந்திரமான சூழலில்தான் முன்னேற்றம் வருமென்ற மூன்றாவது கருத்தை நாம் இப்பொழுது பார்ப்போம்:**

அமெரிக்கா சுதந்திரத்திற்குப் பெயர்போனது என்ற சிறப்புப் பட்டத்தை 18-ஆம் நூற்றாண்டிலேயே வாங்கிவிட்டது. ஐரோப்பாவில் சுதந்திரமாக வாழ முடியாதவர்கள் எல்லாம் சுதந்திரத்தைத் தேடி அமெரிக்காவிற்கு வந்தார்கள். சுதந்திரமாக வாழ முடிந்தால் வாழ்க்கையில் முன்னேறலாம், நல்ல வருமானத்தையும், வசதியையும் பார்க்கலாம் என்ற நம்பிக்கையோடு வந்தார்கள். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. அமெரிக்கா சுதந்திரத்தோடு வருமானத்தையும், வசதியையும் சேர்த்தே அங்கு வந்தவர்களுக்கு வழங்கியது.

நம் நாட்டில் உயர்ஜாதி மக்கள் தாழ்த்தப்பட்டவர்களை எப்படி அடக்கி ஒடுக்கி வைத்திருந்தார்கள், அவர்களுடைய முன்னேற்றத்தை எப்படி எல்லாம் தடுத்தார்கள் என்பது நமக்கு நன்றாகவே தெரியும். வேறு வழியில்லாமல் அவர்களும் பல நூற்றாண்டுகளாக முடங்கிக் கிடந்தார்கள். இந்தியாவிற்கு விடுதலை கிடைத்து, ஜனநாயக ஆட்சி வந்து, காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் போன்ற பெருந்தலைவர்கள் அவர்களுடைய உரிமைகளுக்காகப் போராடி, அவர்களிடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திய பின்னர்தான் இந்தியச் சமூகம் அவர்களையும் முன்னேற அனுமதித்துள்ளது.

இதே மாதிரியான சுதந்திரமில்லாத சூழ்நிலைதான் ஐரோப்பாவில் 17ஆம் நூற்றாண்டிலிருந்து இரண்டாம் உலகப்போர் முடியும்வரை நிலவியது. ஏழைக் குடியானவர்களும், உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த உழைப்பாளிகளும் இப்படி வாழ்க்கையில் முன்னேறும் சுதந்திரமில்லாமல்



அடிமைகள்போலக் கட்டுண்டு இருந்தார்கள். அரசர்களும், பிரபுக்களும் ஆட்சிசெய்த காலமது. உயர்குடி மக்களுக்கு இருந்த உரிமைகளும் சலுகைகளும் பொதுமக்களுக்கோ, சமூகத்தின் அடிமட்டத்தில் இருந்தவர்களுக்கோ இல்லாமலிருந்தது.

இப்படி அடங்கி ஒடுங்கி வாழ்ந்த ஏழை மக்களுக்கு அமெரிக்கா என்றவொரு புது கண்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அங்குச் சென்றால் சுதந்திரமாக வாழலாம், வாழ்க்கையில் முன்னுக்கு வரலாம் என்ற செய்தி காதில் தேனாக ஒலித்தது.

பணக்காரன், ஏழை, உயர்ந்தவன், தாழ்ந்தவன், படித்தவன், படிக்காதவன் என்ற பாகுபாடின்றி எல்லோருக்கும் சுதந்திரமாகச் செயல்-பட ஒரு நாட்டில் சமஉரிமை வழங்கப்பட்டதென்றால் அங்கு மக்கள் எவ்வளவு உற்சாகமாகச் செயல்பட்டிருப்பார்கள் என்பதை நாமெண்ணிப் பார்க்க வேண்டும். பிரான்சில் பிரெஞ்சு புரட்சி 1789-இல் வெடித்தபொழுது மக்களுக்கு இப்படித்தான் சமவுரிமைகள் கிடைத்தன. பொதுமக்களும் உற்சாகம் கொண்டு வாழ்க்கையில் முன்னுக்குவர தீவிர முயற்சிகள் எடுத்தார்கள். ஆனால் 15 வருடங்களிலேயே நெப்போலியன் மீண்டும் முடியாட்சியைக் கொண்டு வந்ததால் புரட்சியினால் கிடைத்த சுதந்திரம் மீண்டும் பறிபோனது. ஆனால் அமெரிக்காவில் அப்படியொரு தடங்கல் வரவேயில்லை. 1776இல் சுதந்திர நாடாகத் தன்னை அமெரிக்கா அறிவித்துக் கொண்டது. தாய்நாடான இங்கிலாந்து அதை எதிர்த்துப் போர் தொடுத்தது. 1783-இல் அமெரிக்கா போரை வென்று தன் சுதந்திரத்தை நிலைநாட்டிக்கொண்டது. அதன் பின்னர் படிப்படியாக அமெரிக்க மக்களுக்குச் சுதந்திரம் அதிகரித்ததேயொழிய குறைய-வில்லை. ஆப்பிரிக்காவிலிருந்து வந்த நீக்ரோக்களை அடிமைகளாக வைத்திருந்தது அமெரிக்காவின் சுதந்திரத் தோற்றத்திற்குப் பெரிய களங்கமாக அமைந்தது. அமெரிக்காவில் 1861-65இல் நிகழ்ந்த உள்நாட்டுப் போரின் விளைவாக நீக்ரோக்களுக்கும் அடிமைத்தளையி-லிருந்து விடுதலை கிடைத்தது.

முன்னேற்றத்திற்குச் சுதந்திரம் ஒன்றுதான் வழி, வேறு வழியில்லை என்று சொல்லவில்லை. கட்டுப்பாட்டின்மூலமும் ஒரு நாடு முன்னேற்றம் பெறலாம். ஆனால் மக்கள் சந்தோஷமாக இருப்பார்களா என்பது சந்தேகந்தான். சோவியத் யூனியனும், சீனாவும் கம்யூனிஸ ஆட்சியின்கீழ் மக்களைக் கடுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்து தம் நாட்டின் முன்னேற்றத்தை விரைவுபடுத்தின. இரு நாடுகளின் பொருளாதார பலம், அரசியல் பலம் மற்றும் ராணுவ பலமெல்லாம் அதிகரித்தன. அதை நாம் முன்னேற்றம்என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் மக்கள் சந்தோஷமாக இல்லை. 1990-இல் ரஷ்யாவில் மக்கள் கம்யூனிஸ ஆட்சியைக் கவிழ்த்துத் தம்முடைய சுதந்திரத்தை மீண்டும் நிலைநாட்டிக் கொண்டார்கள். 1989-இல் சீனாவிலும் மக்கள் Beijing தலைநகரில் எதிர்ப்புப் போராட்டங்களை நிகழ்த்தினார்கள்.

அதிகாரத்தின்கீழ் வரும் முன்னேற்றத்தைவிட சுதந்திரத்தின்கீழ் வரும் முன்னேற்றத்தையே மக்கள் அதிகம் விரும்புகின்றார்கள். ஏனென்றால் சுதந்திரமான முன்னேற்றத்தில் சந்தோஷமும் கலந்துள்ளது. அதிகாரத்தின்கீழ் வரும் முன்னேற்றத்தில் அதிருப்தி கலந்துவிடுகிறது. 1975இல் இந்திரா காந்தி அம்மையார் எமர்ஜென்சியை கொண்டு வந்து இரண்டாண்டுகள் இந்திய மக்களைக் கடுமையான கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்தார்கள். நாட்டின் பொருளாதார நிலை முன்னேறியது; அரசாங்க அலுவலகங்களில் வேலை ஒழுங்காக நடந்தது; குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டன; இருந்தாலும் மக்களின் பேச்சுரிமை, பத்திரிகைகளின் press freedom, எதிர்கட்சி அரசியல்வாதிகளின் பேச்சுரிமை எல்லாம் பறிபோயின. எமர்ஜென்சியை விலக்கி அதன்பின் தேர்தல் நடந்தபொழுது மக்கள் தங்களுடைய அதிருப்தியை முழுவதும் வெளிப்படுத்தி இந்திரா காந்தி அம்மையாரையும், காங்கிரஸ் கட்சியையும் தோற்கடித்தனர்.

இரண்டு வருடக் கட்டுப்பாடே தாங்கவில்லை என்றால் நெடுநாளைய கட்டுப்பாடு எப்படி தாங்கும்? இதை வைத்துப் பார்க்கும்பொழுது அதிகாரத்தின்கீழ் வரும் முன்னேற்றத்தைவிட, சுதந்திரத்தின்கீழ் வரும்



முன்னேற்றம்தான் மக்களை சந்தோஷப்படுத்துகிறது; அதுதான் நீடித்து நிலைக்கும் என்றாகிறது.

அமெரிக்காவிற்குச் செல்கின்ற இந்திய இளைஞர்கள் திரும்பி வர தயங்குவதற்கு அங்குள்ள வசதிமட்டும் காரணமில்லை. அங்கு நிலவும் சுதந்திரமும் ஒரு முக்கியக் காரணம். இங்கே ஒருவர் காதல் திருமணம் செய்து கொண்டாலோ, அல்லது employmentஐ விட்டுவிட்டுச் சுயமாகத் தொழில் தொடங்க விரும்பினாலோ, சொந்தவூரை விட்டு வெளி மாநிலத்தில் வேலை தேடினாலோ, சைவ சாப்பாட்டிலிருந்து அசைவ சாப்பாட்டிற்கு மாறினாலோ உற்றார், உறவினர் கேள்வி கேட்பார்கள்; கண்டிப்பார்கள்; கூடாதென்று சொல்வார்கள். ஆனால் அமெரிக்காவில் இத்தகைய உறவினர் தலையீடு என்பதோ neighbourhoodஇல் உள்ளவர்கள் தலையீடு என்பதோ மிகவும் குறைவு. இதுவொரு மிகப் பெரிய சுதந்திரமாகும். இச்சுதந்திரத்தை அந்நாட்டு மக்கள் பெரிதும் விரும்புகின்றார்கள். அங்கே ஒருவருக்கு 18 வயது ஆகிவிட்டால் அவருடைய எதிர்காலத்தை அவரே நிர்ணயித்துக் கொள்ளும் சுதந்திரம் கிடைக்கிறது. அச்சுதந்திரம் அவருடைய படிப்பு, வேலை மற்றும் திருமணம் என்று எல்லாவற்றிலும் வெளிப்படும். உற்றார், உறவினருடைய பொறாமை மற்றும் போட்டியால் உள்ளூரில் இருந்தால் பிழைக்க முடியாது என்று முடிவு செய்து சிலர் வெளியூருக்குச் சென்று settleஆகி முன்னேற முயற்சி எடுக்கும் சம்பவங்கள் நம் நாட்டில் நிகழ்கின்றன. ஆனால் அமெரிக்காவில் அவரவர் சொந்த வேலைகளைப் பார்ப்பதற்கே அவர்களுக்கு நேரம் சரியாகவுள்ளது. அதனால் அடுத்தவர்கள் வாழ்க்கையில் தலையீடுவதோ, போட்டிப்-பொறாமையினால் அடுத்தவர் முன்னேற்றத்தைக் கெடுக்க முயல்வதோ அங்கே மிகவும் குறைவு. அங்கிருக்கும் வசதியைவிட இந்தச் சுதந்திரமான சூழ்நிலைதான் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவுகிறது. அங்குள்ள தனிநபர் சுதந்திரம் இங்குள்ளவர்களுக்குக் கிடைக்குமளவிற்கு இங்கே சூழ்நிலை மாறினால், இந்தியாவின் முன்னேற்றம் பலமடங்கு விரைவு பெறுவதைக் காணலாம்.

## 4. முன்னேற்றம் விரைவுபடவேண்டுமென்றால் முன்னேற்றத்திற்கு ஒத்துவாராத பழைய விஷயங்களைக் கைவிட வேண்டும்:

வாழ்க்கை என்பது ஓர் இடையறாத முன்னேற்றப் பயணமாகும். எங்கேயும் நாம் நிரந்தரமாக நிலைத்து நிற்க முடியாது. காலத்தின் ஓட்டத்திற்கு ஏற்ப நாமும் மாறிக் கொண்டேயிருக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கையின் வேகத்திற்கு நம்மால் ஈடுகொடுக்க முடியும். நிறையவிடங்களில் நாம் காலத்தின் ஓட்டத்திற்கேற்ப மாறிக் கொண்டுதான் வருகிறோம். ஆனால் நிறையவிடங்களில் மாறாமலும் பழையதையே பிடித்துக் கொண்டுமிருக்கிறோம். ஒரு காலத்தில் நாம் விறகடுப்பில் சமையல் செய்து கொண்டு, மாட்டுவண்டியில் பயணம் செய்துகொண்டு, ஓலைச்சுவடிகளில் எழுத்தாணி வைத்து எழுதிக் கொண்டிருந்தோம். ஆனால் இப்பொழுது விறகடுப்பிலிருந்து gas stoveற்கும், மாட்டுவண்டியிலிருந்து பஸ்ஸுக்கும், ஓலைச்சுவடியிலிருந்து பேப்பருக்கும் நாம் மாறிவிட்டோம். யாராவது gas stoveஐத் தவிர்த்து விறகடுப்பில்தான் சமையல் செய்வேன் என்று பிடிவாதம் செய்தாலோ, பஸ்ஸைத் தவிர்த்து மாட்டுவண்டியிலேயே போவேன் என்று பிடிவாதம் செய்தாலோ நாம் அவர்களைக் கேலி செய்கிறோம். ஆனால் ஜனநாயக ஆட்சியும், மதச்சார்பற்ற அரசும் வந்து 50 ஆண்டுகளுக்கு மேலாகிய பிறகும், நாம் ஜாதி-மத வேறுபாடுகளை வலியுறுத்திக் கொண்டிருப்பதும், அரசாட்சி முடிந்து நீண்டநாள் ஆகியும் நம் நாட்டு முதலமைச்சர்கள் முடிசூடா மன்னர்கள்போல் ஆட்சி செலுத்துவதும், முன்னேற்றத்திற்கு ஒத்துவாராத பழைய விதிமுறைகளையும், பாலிசிகளையும் அரசாங்கம் இன்னமும் வைத்திருப்பதும், சுயதொழிலில்தான் முன்னேற்றமுள்ளது என்று தெரிந்த பிறகும் நாம் அரசாங்க வேலையைத் தேடி ஓடுவதும், கல்வித்துறையில் எவ்வளவோ முன்னேற்றம் வந்த பிறகும் நாம் ஞாபகசக்தியை மட்டும் வலியுறுத்தும் தேர்வு முறைகளை நம்பிக்கொண்டிருப்பதும் வேண்டாத விஷயங்களை இன்னமும் நாம் பிடித்துக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை?

இங்கேதான் அமெரிக்கர்கள் நம்மிடமிருந்து மிகவும் வேறுபடுகிறார்கள். முன்னேற்றம் வேண்டுமென்றால் முடியாட்சியோ, பிரபுக்களின் ஆட்சியோ தடையாகயிருக்கும் என்று தெரிந்தவுடன் அவற்றை உதறி எறிந்து ஜனநாயகத்திற்கு மாறினார்கள். அரசாங்கம் மதச்சார்பற்ற கொள்கையை ஏற்றவுடன், மதவிஷயமான கருத்து வேறுபாடுகள் நாட்டில் கலவரத்தை உண்டுபண்ணுமளவிற்கு அவற்றை வளர அனுமதிப்பதில்லை. அயோத்தியில் ராமஜென்மபூமி விஷயமாக ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் மற்றும் கலவரங்கள் நம் நாட்டின் அமைதியையும், ஒற்றுமையையும் எந்த அளவிற்குப் பாதித்துள்ளன என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். மத்திய அரசின் கவனம் இப்பிரச்சினையால் எந்த அளவிற்குத் திசைமாறியுள்ளது, அரசாங்கத்தின் முன்னேற்றப் பணிகள் எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளன என்பவை எல்லாம் நமக்கு விளங்க வேண்டும்.

வேண்டாத விஷயங்களை ஒருபக்கம் பிடித்துக் கொண்டுள்ளோம் என்றால், இன்னொரு பக்கம் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமான விஷயங்களின் அருமையை உணராமலும் உள்ளோம். தேவையில்லாததை வலியுறுத்துவது தவறு என்றால், தேவைப்படுவதின் அருமையை உணராமலிருப்பதும் தவறுதான். கம்ப்யூட்டரையும் Internetஐயும் வைத்துக் கொண்டு நாம் எவ்வளவோ நம்மறிவை அபிவிருத்தி செய்து கொள்ளலாம். ஆனால் பல பேர் வெறும் e-mail அனுப்புவதற்காக மட்டும் கம்ப்யூட்டரையும் Internetஐயும் பயன்படுத்திக் கொள்கின்றனர். Educational software இப்பொழுது நிறைய வந்துவிட்டது. Language teaching மற்றும் Science teachingஎல்லாம் இந்த softwareஐ வைத்துக் கொண்டு சிறப்பாகச் செய்யலாம். ஆனால் இன்று இந்தியாவில் உள்ள பள்ளிகளில் மாணவ-மாணவிகள் கம்ப்யூட்டரில் செலவிடும் நேரம் குறைவு. ஒரு மாதத்திற்கு ஒரு மணி நேரம்தான் ஒதுக்குகிறார்கள். ஒரு studentற்கு ஒரு கம்ப்யூட்டர் என்றிருந்தால் ஒவ்வொரு studentற்கும் நேரம் அதிகரிக்கும். ஆனால் student எண்ணிக்கை அதிகமாகவும் computerகளின் எண்ணிக்கை குறைவாகவுமிருப்பதால் இப்படி ஒரு studentக்குக் கிடைக்கும் நேரம் குறைக்கப்பட்டுவிடுகிறது. மதர் சர்வீஸ் சொஸைட்டி நடத்தும் Primrose Schoolஇல் கம்ப்யூட்டருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து,

மாணவ-மாணவியர் கம்ப்யூட்டரில் அதிக நேரம் செலவு செய்வதற்கு வழி செய்துள்ளோம். Computerமூலம் teaching வழங்கப்படுவதால் பிள்ளைகளின் அறிவும் அபாரமாக விருத்தியடைந்துள்ளது. இத்தகைய teaching முறைகளும், கம்ப்யூட்டர் பிரயோகமும் நாடெங்கும் Primrose பள்ளி அளவிற்குப் பரவினால் இளைய தலைமுறையினரின் அறிவு பல மடங்கு விருத்தியடையும். அதன் பலன் நம் நாட்டின் முன்னேற்றத்திலும் தெரியும்.

*தொடரும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன்னுடைய ஆசைகளையும், கசப்பான அவற்றின் எதிர் நிலைகளையும் அறிவதும், அவை தன்னுள் சந்திக்கும் பாணியையும் அறிவது முக்கியமான ஞானமாகும். உணர்வைத் தெளிவுப்படுத்தும் திறனுடையதாகும்.

***ஆசையையும், கசப்பையும் அறிவது ஞானம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தான் சொல்லியதையே மறுத்துப் பேசுபவர்களை நாம் பார்க்கிறோம். சிந்தனை ஆரம்பித்த முதல் நிலையில் ஒரு கருத்து தோன்றுவதும், பின்னால் அதைவிடத் தெளிந்த கருத்து தோன்றுவதும் இயற்கை. அதுவே இந்த முரண்பாட்டுக்குக் காரணம்.

***சிந்தனைக்குப் புதியவன் முன்பின் முரணாகப் பேசுவான்.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**887) (Physical organisation) உலகத்தின் இயக்கம் தானே நடப்பது. இரு செயல்கட்கு இடையேயுள்ள வெளி, அடுத்த செயலைத் தயார்படுத்தத் தேவைப்படுவது. ஜட உலகத்திற்குக் காலம் தேவை. உணர்வுக்கும், மனத்திற்கும் தேவையில்லை. ஜடம் உணர்வாக ஆயிரமாயிரம் ஆண்டுகளாகும். நம்மை நேரே சத்தியஜீவியத்திற்குப் போகச் சொல்கிறார் பகவான்.**

***ஒரு படி நகர ஆயிரமாண்டாயிற்று. முடிவான சத்தியஜீவியத்திற்குப் போனால் பல்லாயிரம் ஆண்டு சுருங்கும்.***

சர்க்கார் ஆபீஸில் பேப்பர் தானே நகருவது இல்லை. நகர்ந்தால் நெடுநாளாகும். மேலேயுள்ளவருக்கு அக்கரையிருந்தால் மின்னல் வேகத்தில் நகரும். ஒரு பொருள் அடுத்த பொருளை நோக்கி நகர இடையே வெளி தேவை. இடைவெளியில்லாவிட்டால் நகர முடியாது; நகரத் தேவையில்லை. ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டம் போக இந்தக் கட்ட வேலைகள் பூர்த்தியாக வேண்டும். இவை ஜடத்தில் உண்மை. மனத்திற்கு இது தேவையில்லை. மின்னல் வேகத்தில் நகரும். ஜடம் உணர்வாகி, உணர்வு எண்ணமாவது பரிணாம யோகம். மொட்டு மலர நாளாகாது. செடி காய்க்க பல மாதம், அல்லது பல வருஷங்களாகும். ஒரு மரம் காய்க்க 8 அல்லது 10 வருஷமாகிறது. மனிதன் ஜடத்திலிருந்து உணர்வு பெற 10,000 வருஷமாயிற்று. அடுத்த கட்டம் அதைவிட நாளாகும்.

**பகவான் அதை உடனே செய்ய வேண்டும் என்கிறார்.**

✡ வேலையிலிருப்பவன் வீடு கட்ட ஒய்வு பெற வேண்டும்.

✡ சுதந்திரம் பெற 100 ஆண்டு காங்கிரஸ் வேலை செய்தது.

✡ 70 ஆண்டு கம்யூனிசம் ஆண்டபின் அதை எட்ட முடியாது எனக் கை விட்டுவிட்டது.

✡ 90 ஆண்டு (1857-1947) ஏகாதிபத்தியம் ஆட்சி செலுத்தியபின் சாம்ராஜ்யம் கரைந்தது.

✡ 900 ஆண்டு செல்வம் பெற்ற செட்டியார் குடும்பம் முடிவில் பல்கலைக்கழகம் ஏற்படுத்திப் புகழ் பெற்றது.

**எது செய்யவும் நாளாகும். இரண்டாம், மூன்றாம் கட்டங்கள் முதற் கட்டத்தைவிட அதிக நாளாகும் பலிக்க.** ஆனால் பகவான் 30,000 ஆண்டில் நடக்க வேண்டியதை 30 ஆண்டில் நடத்தலாம் என்றார்.

✡ காசி யாத்திரை கால் நடையாகப் போன காலத்தில் போய் வர பல மாதங்களாயின. இன்று 10 நாளில் முடிக்கலாம். ஏனெனில் இரயில் வந்துவிட்டது.

✡ மனிதன் ஜடம். அறிவு பெற 10,000 ஆண்டுகளாயின. சத்தியஜீவியமாக 3 மடங்கு நாளாகும்.

✡ **மனத்தால் சாதிக்க நாளாகும். சத்தியஜீவியம் என்ற புதுக்கருவி வந்துவிட்டதால் நாளாகத் தேவையில்லை.**

✡ அமெரிக்கா செல்வம் பெற 300 ஆண்டு உழைத்தது.

நாம் இனியும் 300 ஆண்டு உழைக்க வேண்டும் என்று நியாயமாகப் படுகிறது. 300 ஆண்டில் உலகம் சாதித்தவை அனைத்தையும் நாம் கருவியாகப் பயன்படுத்தும் வாய்ப்பு நமக்கிருப்பதால், நாம் 300 ஆண்டு அவர்கள்போல் உழைக்க வேண்டிய அவசியமில்லை.

✡ 1956இல் புவியில் வந்த சக்தியை நம்மால் பயன்படுத்த முடியுமானால் சத்தியஜீவன் பிறக்க யுகம் யுகமாகக் காத்திருக்கத் தேவையில்லை.

அந்த சக்தியைச் செல்வம் பெற பயன்படுத்தினால் அடுத்தவர் 50 ஆண்டில் சாதித்ததை நாம் குறுகிய காலத்தில் முடிக்கலாம்.

❀❀❀



**888) சிருஷ்டியின் ஆனந்தம் (delight) வாழ்வில் இரு பிரிவுகளாகின்றது. வலி, ஆனந்தம் இரண்டையும் ஏற்றால்தான் அனுபவம் முழுமைப்படும். ஒன்றை விலக்கி மற்றதை முழுமையாக அனுபவிக்க முடியாது.**

***வலியைக் கடக்க ஆனந்தத்துடன் வலியையும் சேர்த்து ஏற்க வேண்டும்.***

✡ **இடக் கையில்லாமல் வலக் கை மட்டும் செயல்படுவது முழுப் பலன் தாராது.**

✡ **தொடர்ந்து சாப்பிட்டு, ஜீரணமாகி, உடல்நலம் பெருக மலம், சிறுநீர், வியர்வை ஆகிய கழிவுப்பொருள்கள் உற்பத்தியாகி, வெளியாக வேண்டும். கழிவுப்பொருள் வேண்டாததில்லை. அதின்றி ஜீரணமில்லை.**

✡ **ஒரு கண்ணின் பார்வை முழுப் பார்வையாகாது. இரண்டாம் கண் பார்வைக்கு மூன்றாம் (dimension) நிலையளித்து முழுமை தருகிறது.**

✡ **குற்றவாளி உள்ளதைச் சொல்லமாட்டான். கோர்ட் அவன் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது. போலீஸ் தவறாமல் கண்டுபிடிக்கும். கோர்ட் நியாயம் வழங்க கொடுமைக்கார போலீஸ் தேவை.**

✡ **ஒட்டுக் கேட்பது, கோள் சொல்வது, எதிரியின் இரகஸ்யங்களை அறிய முயல்வது அநாகரீகமான பழக்கங்கள். எந்த சர்க்காரும் CID, informer, spy, ஒற்றனில்லாமல் நிலைக்காது.**

✡ **அறுவை சிகிச்சை ஆயுளை வளர்க்க அவசியம்.**

✡ **குழந்தையைக் கண்டிக்காமல் பள்ளிக்கு அனுப்ப முடியாது. பெற்றோர் பிரியம் கடுமையான கண்டிப்பில் வெளியாகாவிட்டால், குழந்தை படிக்காத கூலிக்காரனாவான்.**

✡ **நண்பன், உடன்பிறந்தவன், பிள்ளைகள், பெற்றோர், குரு, சிஷ்யன் மிக நெருக்கமான உறவுகள். நெருக்கமான உறவில் துரோகத்தைக் காணாதவன் வாழ்வில் உயர் மட்டங்களை எட்டியதில்லை.**

✡ **ரூஸ்வெல்ட், ஸ்டாலினையும், இங்கிலாந்து பிரதமர் ஹிட்லரையும், சர்ச்சில் முஸலோனியையும் முழுவதும் நம்பினர். சர்ச்சில் முஸலோனியைத்**

தலைவராக ஏற்க விரும்பினார். உயர்ந்தது பூரணம்பெறத் தாழ்ந்ததை நாடும்.

✡ கற்புக்கரசிஎனப் பெயர் வாங்கிய பஞ்சகன்னிகைகளில் இருவர் - அகல்யா, தாரா - இந்திரனை, சந்திரனை விரும்பிக் கலந்தவர்.

✡ பதுங்காமல் புலி பாய முடியாது.

✡ பெரு நஷ்டப்படாமல் பெரிய கோடீஸ்வரனாக வர முடியாது.

❀ உலகில் தீமையில்லை. அகந்தையின் பார்வைக்கு அடுத்த பக்கம் தீமையாகத் தெரிகிறது.

❀ 'அன்று இந்த ஆபத்து வந்திராவிட்டால், இன்று இந்த உயர்வை நான் எட்டியிருக்க முடியாது' என்று சாதனை செய்தவர் சொல்லத் தவறியதில்லை.

எந்தத் தவறும் எழாத வாழ்வு எந்த உயர்வையும் காணாத வாழ்வு.

தொடரும்.....

❀❀❀

## ஜீவிய மணி

மொழி தன்னையுணர்வது அகந்தை ஆத்மாவாவதாகும்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

புறத்தோற்றம் வாழ்வை நிர்ணயிக்கும். அகவுணர்வு அன்னையின் அருளைப் பெறும். சிறிய மனிதன் மனமாற்றத்தால் உயர முடியாது என்று கருதுவது தன் நிலையின் மீதுள்ள பற்றை விடமுடியவில்லை என்பதால்தான்.

*விடமுடியாத பற்றை மாற முடியாதென மனம் அறியும்.*





## P.69 A seeker of hidden meanings in life's forms.

வாழ்வின் ரூபங்களில் மறைந்துள்ள இரகஸ்யத்தைத் தேடுபவன்.

✡ லோக மாதாவின் காலத்திற்கடங்காத கட்டவிழ்ந்த கருத்து.
✡ புவியின் போக்கிலுள்ள முரட்டுத்தனமான புதிர்.
✡ காட்டையும், கடலையும் வெல்லும் வெற்றி வீரன்.
✡ இதயத்துள் உள்ள இரகஸ்ய சமுத்திரத்தின் எல்லையற்ற பரப்பு.
✡ ஊரையும், உலகையும் சாடி வெல்லும் சாஸ்திர வல்லுனன்.
✡ மந்திரத்தால் கட்டுண்டு மறைபொருளான வரலாறு.
✡ ஜடத்தின் சட்டம் வகுத்த திட்டம்.
✡ விளக்கமான விவரம், மாற்றினாலும் அறிய முடியாத மாற்றம்.
✡ அறியமுடியாதபடி அமைந்துள்ள முடிவு.
✡ நிலையற்ற வாழ்வின் நிதானமற்ற ஓட்டம்.
✡ மௌன விதி அவன் பாதையைக் கண்டு வழிநடத்துகிறது.
✡ புரண்டு வரும் பிரவாகத்தின் நிலைத்த தடங்கள்.
✡ உறுதியான பூமி உந்தி எழுந்து, சற்று நிலைக்கும்.
✡ பரந்து விரியும் மனத்தின் புதிய அடிவானங்கள் புத்துயிர் தரும்.
✡ கண்டத்தின் அகண்டம் அருகில் வர மறுக்கிறது.
✡ முடிவான முடிவில் எண்ணம் தன்னையிழக்கும் நிலை ஏற்படவில்லை.
✡ ஆத்மானுபவத்தின் எல்லையைக் காண முடியுமா?
✡ எல்லை, எட்டித் தொட்டோம்என்ற எல்லையை எட்டவில்லை.
✡ எட்டாத சிறப்பு ஏக்கமாக அழைக்கிறது.
✡ கண்ணுக்குத் தெரியாத தூரத்து வேலிகள்.
✡ நீண்ட பயணம் நிலையாகத் தொடங்கிற்று.

⇛⇛⇛⇛

✡ காலத்தின் கதியில் கலம் விட்ட மாலுமி.
✡ உலகத்தின் ஜடத்தை மெதுவாகக் காண்பவர்.
✡ காயமென்ற பிறவியில் காலெடுத்து வைத்தவன்.
✡ குறுகிய குட்டையில் கட்டுமரம் கற்றவன்.
✡ ஆழங் காண முடியாத அகண்டத்தை ஆழ்ந்து பார்க்க முயன்றான்.
✡ காலமெனும் கடலில் கப்பல் விட்ட பெருமகன்.
✡ உலகை வெல்லும் வேட்டையின் ஒழுங்கற்ற முதல் ஆரம்பம்.
✡ தெய்வ சக்தியை அறியாத மனிதன்.
✡ பெரிய போரின் தயக்கமான துவக்கம்.
✡ ஓட்டைக் கலத்தை ஓட்டும் வல்லுனனான மாலுமி.
✡ சிறிய நிலையற்ற சரக்கின் நாணயமற்ற வியாபாரி.
✡ கரையை விட்டகல மறுக்கும் கடல் எழுப்பும் பயம்.
✡ தூரத்து ஆபத்தைத் தொட மறுக்கும் மனப்பான்மை.

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

குறை கூறாமல் - வருத்தப்படாமலிருந்தால் - ஒவ்வொரு செயலிலும் திருவுள்ளத்தைக் காண்கிறோம். அதுவே நன்றியறிதல்.

***திருவுள்ளத்தைக் காண்பது நன்றியறிதல்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

**சக்தி, திறமை, அறிவு குறைவாக இருப்பதால் நாம் கட்டுப்பாட்டை நாடுகிறோம்.**



# உலகம்–மோட்சம்–ஸ்ரீ அரவிந்தம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## மனிதனும், பிரபஞ்சமும்

மனிதன் தனித்த ஜன்மம். அவன் உலகத்தின் பகுதி. உலகம் பூமியின் பகுதி. பிரபஞ்சம் என்பது சூரிய மண்டலங்களைத் தன்னுள் பகுதியாகக் கொண்டது. ஸ்ரீ அரவிந்தம் பிரம்மம், பிரபஞ்சம், மனிதன் – Transcendent, Universal, Individual எனவும் கூறும் பொழுது மனத்தில் பிரபஞ்சம்என்பது பிரம்மம் அப்படி மாறியது, பிறகு பிரபஞ்சம் மனிதனாயிற்றுஎன்று கொள்கிறது. அதாவது மனிதனுள் பிரபஞ்சமும், அதனுள் பிரம்மமும் உள்ளதுஎன்பது கொள்கை, அடிப்படை. மரபு சொல்வது வேறு. உடல், உயிர், மனம், ஆத்மாவாலான மனிதன் மரணத்தால் உடல் அழிந்து மண்ணோடு மண்ணாய் மக்கும். உயிர் ஆவியாகி உலவி ஆவியுலகத்திலிருக்கும். மனம் செய்த சிந்தனைகள் அழியா. அவை உலகத்தில் சூட்சுமமாகச் செயல்படும். ஆத்மா தவத்தால் மோட்சம் பெறும்.

ஸ்ரீ அரவிந்தம் கூறுவது: மனிதன் ஆத்மா. அதுவே பிரபஞ்சமும், பிரம்மமுமாகும். தன்னைக் கண்டு பிரபஞ்சத்தில் விரிந்து, பிரம்மமாக உயர்ந்து இவ்வுலகில், இவ்வுடலில், இதே உயிரில், இம்மனத்தில் வாழ்வது தெய்வீக வாழ்வுஎன ஸ்ரீ அரவிந்தம் கூறுகிறது.

## அகந்தை Ego

சத்தியஜீவியம் இரண்டாகப் பிரிந்து சிருஷ்டி ஏற்பட்ட பொழுது மனம் ஏகனான பரமாத்மாவை அநேகனாகப் பிரித்தது. இது பிரியாத பிரிவினை. பிரியாத பிரிவினையைப் பிரியும் பிரிவினையாக்குவது அகந்தை. மகனுக்குத் திருமணமாவதால் குடும்பம் பிரியும் அவசியமில்லை. தனிக்குடும்பம் போவதாலும், வெளிநாடு போவதாலும் பிரிய வேண்டாம். வீட்டிலேயிருந்தாலும், ஊரிலேயே இருந்தாலும்

பிரியப் பிரியப்பட்டால் குடும்பம் பிரிந்துவிடும். பிரியப் பிரியப்படுவது, நான் வேறு, மற்றவர் வேறு என்ற எண்ணம் பிரிக்கும். அதுவும், அது போன்ற எண்ணங்களும், செயல்களும் அகந்தைக்குரியன. காலம் பிரிக்கும், மனம் பிரிக்கும். அவை கடுமையான – மீண்டும் சேர முடியாத – பிரிவினையன்று. அகந்தை பிரிப்பது, மீண்டும் கூடாது. அகந்தை அழியாமல் கூடாது.

## சச்சிதானந்தம்

பணம் வைத்திருப்பவன் தொழிலாரம்பிக்க வேண்டிய அவசியமில்லை. அறிவுள்ளவன் புத்தகம் எழுதும் நிர்ப்பந்தம் உடையவனில்லை. பாடும் திறமையுள்ளவரை எவரும் பாட வேண்டும்எனக் கட்டாயப்படுத்த முடியாது. இது எல்லாக் கட்டங்களிலும் உண்டு. தானே பிரியப்பட்டால்தான் இது நடக்கும். சத்திலிருந்து ஜடம்வரை, நாம் என்ன சாப்பிட வேண்டும், என்பதுவரை நிர்ப்பந்தமில்லை. நாமே உட்படுத்திக் கொள்ளாவிட்டால் கட்டாயமில்லை. பிரம்மம் சிருஷ்டிக்கும் என்ற கட்டாயமில்லை.

1) பிரம்மம் சிருஷ்டிக்க விரும்பியது.

2) அதனால் அது சத் (existence) ஆயிற்று.

3) பிரம்மத்திற்கு சிருஷ்டிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாததுபோல் சத்திற்குச் சித்தாக வேண்டும்என்ற கட்டாயமில்லை. சத்தாகவேயிருக்கலாம். சித்தாக மாற சத் முடிவு செய்தால், அது தன்னையறிய வேண்டும் (must become conscious). சித் என்பதிலிருந்து சிந்தனை வந்தது. தான் யார்என சத் அறிய விரும்பினால் அவ்விருப்பம் அதைச் சித்தாக மாற்றுகிறது. Sat is existence. It can exist without knowing what it is. When Sat wants to know what it is – to become conscious of what it is – it becomes consciousness. மூளை மூளையாக இருக்கலாம், அறிவு பெறும் கட்டாயம் அதற்கில்லை. மூளை அறிவுபெற முடிவுசெய்தால் அது பெற முடியும். அது அறிய ஆரம்பித்தால் மூளை அறிவாக மாறு–கிறது.

4) பிரம்மத்திற்கு சிருஷ்டிக்கும் அவசியமில்லை.

தானே இச்சைப்பட்டு சத்தாயிற்று.

5) சத்திற்குச் சித்தாகும் கட்டாயமில்லை.

தான் சித்தாகப் பிரியப்பட்டதால் சித்தாயிற்று.

இதைச் செய்ய அது தன்னை அறிந்தது.

6) சத் என்பது ஜீவன். அதற்கு ஜீவியமில்லை. ஆனந்தமில்லை.

ஜீவியம் ஜீவியமானபின் தன்னை அனுபவிக்கும் அவசிய–மில்லை.

திருமணம் செய்து கொள்ள எவருக்கும் கட்டாயமில்லை.

ஜீவனான ஜீவியம் தன்னை அனுபவிப்பது ஆனந்தம்.

ஜீவியம் தன்னை அனுபவிக்க முடிவு செய்வது ஆனந்தத்தை நாடுவது.

ஜீவியம் அகம். ஆனந்தம் புறம்.

7) சச்சிதானந்தம் என்றால் சத், சித், ஆனந்தமாகும்.

8) இது பிரம்மத்தின் முதல் நிலை வெளிப்பாடு.

9) சத் என்பதை சித், ஆனந்தமாகப் பிரிப்பது சத்தியஜீவியம். அதைச் செய்ய வைப்பது தெய்வீக மாயை.

10) சத், சித், ஆனந்தம் – அகம்

சத்தியஜீவியம் – புறம்

அகம், புறமாகும் பொழுது சத் என்பது சத், சித், ஆனந்தமாக அதன் புறமான சத்தியஜீவியத்தால் பிரிக்கப்படுவது தெய்வீக மாயையின் செயல்.

முதலாளி கம்பனியை உற்பத்தி செய்ய டைரக்டர்கள் நிறைந்த போர்டையும், ஜெனரல் மேனேஜரையும் நியமித்து கட்டடங்களும் மெஷின்களும் நிறைந்த கம்பனியை ஆரம்பிக்கிறார்.

| | | |
|---|---|---|
| முதலாளி | – | பிரம்மம் |
| கம்பனி | – | சத் |
| டைரக்டர்கள் | – | சித் |

கட்டடம் – ஆனந்தம்

– சத் செயல்படுவது சித்தால், அனுபவிப்பது ஆனந்தத்தால்.

– கம்பனி செயல்படுவது டைரக்டர்களால், அவர்கள் ஆனந்தப்படுவது கம்பனிஎன்ற கட்டடம், மெஷின் உற்பத்தி செய்வதால்.

## பிரம்மம் சிருஷ்டிக்கிறது

பிரம்மா உலகை சிருஷ்டித்தார்என நாம் அறிவோம். பிரம்மா தெய்வீக மனத்திற்குரிய கடவுள். பிரம்மா சிருஷ்டித்தார் எனில், மனம் சிருஷ்டித்ததுஎனப் பொருள்.

உலகம் தற்செயலாய் சிருஷ்டிக்கப்பட்டதுஎன விஞ்ஞானம் கூறுகிறது.

கடவுள்என ஒருவர் உலகுக்கு அப்பாலிருக்கிறார். அவர் உலகை சிருஷ்டித்தார்எனவும் கூறுகின்றனர்.

கடைசி வாதத்திற்குப் பதிலாக பகவான் கேள்வி எழுப்புகிறார் – ஏன் தீமை, கொடுமையைப் படைத்தார், அப்படிப்பட்ட உள்ளம் உள்ளவரா கடவுள்?

தற்செயலாய் எழுந்ததுஎனில் உலகம் ஒரு சட்டத்திற்குட்பட்டு உள்ளதை நாம் காண்கிறோம்.

பிறந்தவன் இறக்கிறான்.

பருவம் தவறாமல் வருகிறது.

தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்திற்கு ஓடுகிறது.

ஒரு முறையும் பள்ளத்திலிருந்து மேட்டுக்கு ஓடுவதில்லை,

என்ற ஆயிரம் சட்டங்கள் செயல்படும் பொழுது

தற்செயலாய் சிருஷ்டிக்கப்பட்டது என்றால்,

எப்படி இரண்டும் ஒரே சமயத்தில் செயல்படும்?



இறைவன் தானே உலகமானான் எனக் கொண்டால் (hypothesis) அகண்டம் கண்டமாயிற்று என்றாகிறது. முடிவற்ற இறைவன் சிறு அணுவானான் என்றாகும். அனந்தம் அணுவாக மாறும். மீண்டும் அணுவிலிருந்து அனந்தம் பரிணாமத்தால் வெளி வரும். இக் கொள்கையை உண்மைஎன நிரூபித்தால்,

1) தற்செயல்என்ற கருத்தும், மீற முடியாத சட்டம் செயல்படுகிறது என்பதும் இக்கொள்கைக்கு உட்பட்டு நாம் ஏற்கும்படி அமைகிறது.

2) இதற்குரிய வாதத்தால் இக்கொள்கையை பகவான் நிரூபிக்–கிறார்.*

3) **இதன் முடிவு மனம் உடலைவிட முக்கியமானதுஎன முடிகிறது.**

4) அந்த மனம் பிரம்மாஎன்ற மனமில்லை, Supermind சத்திய ஜீவியம்என முடிக்கிறார்.

5) முடித்தபின் அதுவே முடிவில்லை. சச்சிதானந்தம் அதற்கும் மேலுள்ளது என்கிறார்.

6) சத்தியஜீவியம் சிருஷ்டித்ததுஎன்ற வாதம் பிரம்மம் (Absolute) சிருஷ்டித்ததுஎன்றாகும் என்கிறார்.

Indeterminates, Cosmic determinations, Indeterminable என்பது அத்தியாயத் தலைப்பு. புரியாதபுதிர் என்பது பிரபஞ்சத்திற்குரியது. அது எதனாலும் நிர்ணயிக்க முடியாத பிரம்மத்தால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற விளக்கம் தத்துவத்தின் தலை சிறந்த நெறி. இவ்வத்தியாயம் தனிக்கட்டுரையாக விளக்கி எழுதப்பட்டுள்ளது.

மேற்சொன்னது இரண்டாம் புத்தகத்தில் முதல் அத்தியாயம். இரண்டாம் புத்தகம் 'ஞானமும் – அஞ்ஞானமும்' ஆன்மீகப் பரிணாமம் செயல்படும் வகை என்ற தலைப்பையுடையது. இதன் முதற் பகுதி (14 அத்தியாயங்கள்) எப்படி ஞானம் அஞ்ஞானத்தினின்று பரிணாமத்தால் வெளிவருகிறது என்பது. அதன் 14 அத்தியாயங்களை வரிசையாகக் காண்போம். அதன்முன் நூலின் அமைப்பைப் பார்த்தால், முதல்

* வாதம் சிக்கலானது. அத்தியாயம் விளக்கமாகப் பேசும். இவ்விளக்கத்தை இந்த அத்தியாயத்தின் (Book II, Chapter I) விளக்கமான கட்டுரையில் காணலாம்.

புத்தகம் சிருஷ்டி (ஞானம் அஞ்ஞானமாவது). இரண்டாம் புத்தகத்தின் முதற் பகுதி எப்படி ஞானம் அஞ்ஞானத்திலிருந்து வெளி வருகிறது என்பது. இரண்டாம் பகுதி எப்படி அப்படி வெளி வந்த ஞானம், ஆன்மீகப் பரிணாமத்தால் ஆன்மாவாகி, ஆன்மா வளர்ந்து சத்தியஜீவியமாகிறது என்பதாகும். மேற்சொன்ன முதல் அத்தியாயம்

- ரிஷிகள், விஞ்ஞானிகள் இருவரும் நம்பும் நாத்திக-வாதத்திற்குப் பதில் சொல்வதுடன்,
- விஞ்ஞானிகள் திகைப்பை, தர்க்க ரீதியாக விலக்குகிறது.
- ஆன்மா ஆதி அந்தமற்றது, அசைவற்றது, அழிவற்றது, பிறக்காதது, இறப்பில்லாதது என்பது எப்படி மனம் கண்ட ஒருதலைக் காட்சிஎனவும் எடுத்துக் கூறுகிறது.
- பிரம்மத்தின் முழுமை, காலத்தின் மூன்று நிலைகள், மௌனம், ஐக்கியம், ரூபம், சிருஷ்டி, ஆகியவற்றிற்கு உள்ள நிலைகள் இரண்டல்ல, மூன்றுஎன அறிவைக் கடந்த நிலையை அறிவுக்கு எட்டும்படிக் கூறுகிறார்.
- மாயையின் மூன்று நிலைகள், மாயையின் மூன்று திறன்களை பிரம்மத்தின் மூன்று நிலைகளுடைய சக்தியாக விவரித்து மாயை என்பது இல்லாததில்லை, இருப்பதிலேயே சிறந்தது, அது பிரம்மத்தின் ஜீவியம்என 8 அல்லது 10 வகைகளாக அறிவு ஞானமாக முதிரும்படிக் கூறுகிறார். ஐன்ஸ்டீனும், கோபர்னிகஸ்ஸும் விஞ்ஞானத்தில் ஏற்படுத்திய அடிப்படைப் புரட்சிகள் பெரியவை. பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஆன்மாவில் ஏற்படுத்தும் புரட்சி அவற்றை, சூரியமண்டலத்தின் முன் எறும்புப் புற்றாக்குகிறது.
- நூல் நம் ஆத்மா ஜீவியத்தில் ஏற்படுத்தும் புரட்சியை மனம் பரந்து விரிந்து விரும்பி மலர்ந்து ஏற்பது பக்தி. அது பலிப்பது சித்தி. இப்புரட்சியை மேற்கொள்ள முன் வருபவர்கள் மனத்தை இழந்து தோல்வியடைகின்றனர். அத்தோல்வியும் வாழ்வின் பெருவெற்றியாகும். தோற்க மறுப்பவர் புரட்சி வீரர். தோல்வி தோற்றால் ஆத்மா மலரும். மலர்ந்த ஆத்மா வளரும். அது பரிணாம வளர்ச்சி. ஆன்மீகப் பரிணாமம் உலகம் கற்பனை செய்யாத கருத்து. ஆரம்பத்தில் இது புரியா விட்டாலும், மனம் கேள்வியின்றி ஏற்றுக் கொண்டால் நாளடைவில் நூல் புரியும். புரியவில்லை என்ற நிலை விலகி அழியும்.



இந்த நோக்கத்துடன் மற்ற முக்கியமான சிக்கல்களை அவிழ்க்கும் வகையில் அடிப்படையான விளக்கங்களை எழுதுகிறேன்.

## பிரம்மம், புருஷா, ஈஸ்வரா

## மாயா, பிரகிருதி, சக்தி

ஒரு முதலாளி கம்பனியை ஆரம்பித்தால் மானேஜர் ஒருவரை நியமிக்கிறார். தொழிலாளிகள் வேலையைச் செய்கிறார்கள். மகாத்மா காந்தி சுதந்திரத்தைப் பெற ஓர் இயக்கம் ஆரம்பித்த பொழுது காங்கிரஸ் என்ற கட்சிக்கு ஒரு தலைவரிருந்தார். தொண்டர்கள் வேலையைச் செய்தனர். குடும்பத்தலைவர் எண்ணத்தைத் தலைவி நிறைவேற்றுகிறார். பிள்ளைகள் மேலும் பூர்த்தி செய்கின்றனர் என்பவை வழக்கு. எடிசன் 1100 புதுப் பொருள்களை – பல்ப் போன்றவற்றைக் – கண்டுபிடித்து கம்பனி ஆரம்பித்துத் தானே மானேஜராகவும் இன்ஜீனீயராகவும் தொழிலாளியாகவும் வேலை செய்து அவற்றைப் பதிவு செய்து (patented) இன்று உலகப் பிரசித்தி பெற்றதாக General Electric என்ற கம்பனியை நிறுவினார்.

- மனிதன் சிந்திப்பான்.

  சிந்தனை சிருஷ்டியுடையது.

  சிந்திக்கும் மனிதனை, பிரம்மம் எனவும் சிந்தனையால் சிருஷ்டிக்கும் திறனை, மாயை எனவும் கூறினர்.
- மனிதன் செயலாற்ற சாட்சியாய் நிற்பான்.

  செயலை நிறைவேற்றுவான்.

  செயலாற்றும் மௌனமான நிலையைப் புருஷனெனவும் அத்திறனை பிரகிருதி எனவும் கூறினர்.
- மனிதனால் சிந்தித்து சிருஷ்டி செய்து, மௌனமாக அத்திறனால் செயலை முடிக்கவும் முடியும்.

இருநிலைகளையும் ஏற்ற அவனை ஈஸ்வரன் எனவும் அவனது திறனை சக்தி எனவும் கூறினர்.

- சிந்தனையால் சிருஷ்டி செய்வது முதல் நிலை.
- மௌனமாயிருந்து செயலை முடிப்பது இரண்டாம் நிலை.
- சிந்தனையால் சிருஷ்டி செய்து தீவிரமாகச் செயலை முடிப்பது முதல் இருநிலைகளும் சேர்ந்த மூன்றாம் நிலை.
- இம்மூன்று நிலைகளும் ஒருவருக்கே உரியது.

பிரித்துப் பார்க்கும் மனம் மூன்றையும் வெவ்வேறு நிலைகளாகக் கருதி இல்லாத சிக்கலை எழுப்பி முடிச்சு அவிழவில்லைஎனத் திகைக்கிறது.

| | | |
|---|---|---|
| முதலாளி | – | பிரம்மம் |
| மேனேஜர் | – | புருஷன் |
| தொழிலாளி | – | ஈஸ்வரன் |

என்று நாம் கொண்டால் முதலாளி (conceptively creates) சிந்தனையால் கம்பனியை சிருஷ்டிக்கிறார். மேனேஜர் (dynamically executes) தீவிரமாகச் செயல்பட்டு முதலாளியின் சிந்தனையை நிறைவேற்று–கிறார். தொழிலாளி (conceptively creates and dynamically executes) முதலாளி சிந்தனையால் சிருஷ்டித்ததையும், மானேஜர் செயலால் பூர்த்தி செய்வதையும் சேர்த்துச் செய்கிறான். எடிசன் முதலாளியாகவும், மானேஜராகவும், தொழிலாளியாகவுமிருந்தான். எனவே இந்த மூன்றும் இறைவனின் மூன்று அம்சங்கள், மூன்று வேறு நபர்களில்லை என்பது ஓரளவு விளக்கும் உதாரணம். மாயை என்பது பிரம்மத்தின் சக்தி, பிரகிருதி புருஷனின் சக்தி, சக்தி ஈஸ்வரனின் சக்தி. ஆகையால் பிரம்மம், புருஷன், ஈஸ்வரன், மாயா, பிரகிருதி, சக்திஎனக் கூறும் ஆறும் இறைவனின் 6 திருமுகங்கள், ஆறு அம்சங்கள்.

- இறைவன் ஒருவனே.
- அவன் அம்சங்கள் ஆறு.



## பரமாத்மாவும், ஜீவாத்மாவும்

நமது ஆன்மீக மரபு பரமாத்மா அழிவற்றது, ஜீவாத்மா பரமாத்மாவில் அழிவது எனக் கூறுகிறது. ஜீவாத்மாவுக்கு நம் மரபு அமரத்வம் தரவில்லை. ஸ்ரீ அரவிந்தர் பரமாத்மா பிரபஞ்ச ஆத்மாவாகி, ஜீவாத்மா ஆயிற்று. ஜீவாத்மாவினுள் பிரபஞ்ச ஆத்மாவும், பரமாத்மாவும் புதைந்துள்ளனர் என்கிறார். பிரதமர், MP ஆக ஆரம்பித்து பார்லிமெண்ட்டில் மெஜாரிட்டி கட்சித் தலைவராகி பிரதமரானார். அதனால் MPயினுள் கட்சித் தலைவரும், பிரதமரும் புதைந்துள்ளனர் எனலாம்.

## DIVINE AND UNDIVINE இறைவனும் அசுரனும்

நமது உடலில் வாய் உணவை உட்கொள்கிறது. வயிறும், குடலும் அதை ஜீரணம் செய்கின்றன. ஜீரணமாகாதவை வெளியேறுகின்றன. மூச்சு உள்ளே சென்று ஆக்ஸிஜனால் இரத்தத்தைச் சுத்தம் செய்து, அசுத்தமான காற்றை வெளியேற்றுகிறது. வியர்வை விசர்ஜனம். வாய் நாம், பெருங்குடல் நாமல்ல என்றோ உள்ளே போகும் காற்று நாம், வெளியே வரும் காற்று நாமல்ல என்றோ கூற முடியாது. வாயும், மூக்கும், குடலும் நாமே. குடலில்லாமல் உயிர் வாழ முடியாது. வேண்டியது, வேண்டாததுஎன உலகை இரண்டாகப் பிரித்தால்,

- வேண்டாததுஎன்பது தற்சமயம் வேண்டாதது, எப்பொழுதுமே வேண்டாததில்லை.
- எதுவுமே ஒரு சமயம் நமக்கு வேண்டியிருக்கும். அது பர்சனாலிட்டியின் அளவைப் பொருத்தது.
- அனுபவம் அதிகமாக அதிகமாக ஊரில் எவரும் ஒரு சமயம் நமக்கு இன்றியமையாதவராய் விடுவார் எனப் புரியும்.
- பல்வேறு வகையான சொத்து, பதவி, அதிகாரம் அதிக நாள் அனுபவித்தவருக்கு இரண்டு விஷயம் புரியும்.
  - எவரும் எந்த நேரமும் அவசியமாய் விடுவர்.
  - எவரும் எந்த நேரமும், நேரம் அவர்க்கு சாதகமாகி விட்டால், நம்மை முழுவதும் அழிக்க முடியும்.

- Circumconscient, சூழலின் ஜீவியமறிந்தவர் நம்முள்ளே உள்ள எதுவும் வெளியிலுள்ள எதையும் கவர்ந்து ஆபத்து விளைவிக்கலாம்என அறிவர். அவர்கள் எதிரிகளை ஏற்படுத்திக் கொள்ள மாட்டார். எவரையும் எதிர்க்க மாட்டார்.
- அடுத்த கட்டத்தில் ஆன்மீக விவேகமுள்ளவர் எவரும், சூழலின் ஜீவியம், கரணங்களின் ஜீவியம் (intraconscient) ஆகிய இடங்களில் உள்ள எதுவும் நமக்குத் திருவுருமாற உதவும்என அறிவர்.
- அதனால் உலகில், பிரபஞ்சத்தில் நமக்கு இன்றியமையாதது என ஒன்றில்லை என்பது ஆன்மீக ஞானம்.

இவற்றை பகவான் எடுத்துரைக்கக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

- வேண்டாததை அனுபவிக்காதவனுக்கு வேண்டியதின் ஆழ்ந்த ருசியான அனுபவமில்லை. வறுமையை அனுபவித்தால் வசதியின் அருமை தெரியும்.
- இறைவன் நாடும் ஒருமையை நாம் ஏன் மறுக்க வேண்டும்? வேண்டாதது இறைவனுக்கு வேண்டியது என்பதால் நமக்கும் வேண்டியதே.
- வலியை அனுபவிக்காதவன் ஆனந்தத்தின் முழுமையை அறிய முடியாது.
- உலகம் இறைவனின் ஆனந்தலீலைஎன்று அறிய வேண்டாதது இருக்கக் கூடாது.
- தீமையை விலக்குபவன் நன்மையையும் விலக்குவான்.
- பேர்ஆனந்தம் பெறவேண்டி பெரிய இருளை இறைவன் ஏற்படுத்தினான்.
- வேண்டாததுஎன நாம் அறிவது நம் அறியாமை அறிவது.
- குறுகிய அளவு ஜீவனிலில்லை, அகந்தையில் உள்ளது.
- எதிரானதை அனுபவிக்காமல் முழு ஞானத்தை அறிய முடியாது.



- அறியாமை அறிவைவிடப் பெரியது.

இறைவனே உலகமானான்என்பது கொள்கையானால், வேண்டாதது வர முடியாது.

## புத்தர், சங்கரர், பகவான் ஸ்ரீ அரவிந்தர்

இதுவரை உலகில் புத்தரைப் போன்ற அறிஞர் (thinker) பிறக்கவில்லை என்று உலகம் கூறுகிறது. அதையே பகவானும் கூறுகிறார். புத்தரையும் சங்கரரையும் பற்றிப் பேசும் பொழுது ஸ்ரீ அரவிந்தர்,

- சங்கரர் புத்தரை விடப் பெரிய அறிஞர் ஆனால்
- புத்தர் அவரை விடப் பெரிய ஆத்மா,

என்று கூறுகிறார். உபநிஷதம் கூறுவது புத்தருக்கு ஒத்துவரவில்லை. அதனால் அவர் செய்த தவம் அவரை நிர்வாணம் எய்த உதவியது. எட்டுப் பாதைகளை அவர் உலகுக்கு அளித்தார். தீமையைக் கடக்க, அதிலிருந்து தப்பிக்க பௌத்தம் அகந்தையிலிருந்து விலகும் பாதையைக் காட்டுகிறது. மனம் அகந்தையிலிருந்து விலகினால் அகந்தை கரைகிறது என்று கண்டார். அதே போல் மனம் சத் புருஷனிலிருந்து (Self) விலகினால் சத் புருஷனும் கரையும் என்றார். அகந்தையை மனம் உற்பத்தி செய்ததால், மனத்தால் அகந்தையைக் கரைக்க முடியும். சத் புருஷனை அகந்தை உற்பத்தி செய்யவில்லை. அகந்தை உற்பத்தியாவதன் முன் சத்புருஷன் உற்பத்தியானதால் அதை மனத்தால், மனத்தின் விசாரத்தால் கரைக்க முடியாதுஎன பகவான் கூறுகிறார். அகந்தையையும், தீமையையும் வென்ற பௌத்தம் கடவுளில்லை என்றது. புத்தர் பிரபஞ்ச வாழ்வு (existence) என்ன என்பதை ஆராய மறுத்ததால் அவர் கூறுவதை நாம் ஏற்க முடியாதுஎனக் கூறுகிறார். புத்தரை சங்கரர் கடந்து சென்றார். அவரை வென்றார். உலகம் மாயை என்றார். உலகம் புத்தரைக் கைவிட்டு சங்கரரை ஏற்றது.

- சங்கரர் மாயைஎனக் கூறுவது சரியில்லை.
- அஞ்ஞானத்தை சங்கரர் மாயைஎனக் கூறுகிறார்என பகவான் கூறுகிறார்.

சங்கரர் புத்தரைக் கடந்து வந்ததைப் போல ஸ்ரீ அரவிந்தர் சங்கரரைக் கடந்த வகையை இரண்டாம் புத்தகம் 5, 6 அத்தியாயங்–கள் கூறுகின்றன.

## ஞானம், அஞ்ஞானம்

மனிதன் உலகை அறிய முயல்கிறான். அவனுக்குள்ள பெரிய கருவி மனம். மனம் பிரிக்கும் கருவி. இதனால் முழுமையைக் காண முடியாது. பகுதியைத்தான் காண முடியும். மனம் ஒரு பகுதியைக் கண்டால், காணாத பகுதியிருக்கும். அது எஞ்சியிருக்கும். இதை duality, இரட்டை என்கிறோம். ஒளி, இருள்; மெய், பொய்; பிரம்மம், சிருஷ்டி; வலி, ஆனந்தம்; மௌனம், சப்தம் என்பவை அது போன்ற இரட்டைகள். அதனால் சிருஷ்டியில் மனம் எதைக் கண்டாலும், அதற்கு எதிரான இரட்டை உடனே எழும். சத் என்பதை நாமறிந்த மாத்திரம் அசத் எழுகிறது. அப்படி எழுந்த இரட்டைகள் ஏராளம். தாழ்ந்தது, உயர்ந்தது; நல்லது, கெட்டது; ஆண், பெண்; என்பன போன்றவை அவை.

- மனம் பகுதியை அறியும் கருவி என்பதால் இறைவனையும் – பிரம்மத்தையும் – மனம் பகுதியாகவே அறிந்தது. வேதம், உபநிஷதம், கீதை ஆகியவை அப்படி அதிகபட்சம் இறைவனைக் கண்டு கொண்டதை அவர்கள் அக்ஷரப் பிரம்மம் என்றனர். அதுவே முடிவு என்றும் கூறினர்.

காமிரா படம் எடுத்தால், நாம் காணும் உலகில் ஒரு பகுதியைத்தான் படமாக எடுக்க முடியும். நாம் காண்பதே முழு உலகமில்லை, ஒரு பகுதிதான் என்பதால் காமிராவால் முழு உலகை அறிய முடியாது. அது கருவியின் குறை. வீடியோ காமிராவை விட அதிகமாக அறியும், அசைவைப் படம் பிடிக்கும் என்பது உண்மையானாலும், வீடியோவாலும் முழு உலகையறிய முடியாது. ராக்கட்டில் satellite மூலம் பூமியை முழுவதும் பார்க்க முடியும். மனம் காண முடியாத முழுமையை சத்தியஜீவியம் காண முடியும். சத்திய ஜீவியத்திற்கு இரட்டையில்லை, முழுமையுண்டு. அப்படி மனம் ஏற்படுத்திய அடிப்படையான இரட்டைகளில் சச்சிதானந்தத்தின் எட்டு அம்சங்கள் முக்கியமானவை.



| சத் | சித் | ஆனந்தம் |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| ஐக்கியம், சத்தியம், நன்மை (goodness) | ஞானம், சக்தி | அழகு, சந்தோஷம், அன்பு |

இவ்விரட்டைகள்

| | | |
|---|---|---|
| ஐக்கியம் | X | பிரிவினை (பகுதி) |
| சத்தியம் | X | பொய் |
| நன்மை | X | தீமை |
| ஞானம் | X | அஞ்ஞானம் |
| சக்தி | X | இயலாமை |
| அழகு | X | விகாரம் |
| சந்தோஷம் | X | கவலை |
| அன்பு | X | வெறுப்பு |

சச்சிதானந்தம் என்பது இறைவன். இறைவனை இந்த எட்டு இரட்டைகளில் ஒன்றின் மூலம் விளக்கிக் கூறலாம். ஆனால் வேதம், உபநிஷதம், ஸ்ரீ அரவிந்தம் இறைவனை ஞானம் X அஞ்ஞானம் என்பதன் மூலமே கூறுகின்றன. மனிதன் மனமுடையவன். மனமே அவன் உயர்ந்த கருவி என்பதால் மனம் பெறுவது ஞானம் என்பதால் ஞானம் X அஞ்ஞானம் என்ற இரட்டை பொருத்தமாக அமைகிறது. அடுத்த அத்தியாயம் ஞானமும் அஞ்ஞானமும். அதை எடுக்கும் முன் சங்கரர் மாயை என்று கூறுவது உண்மையில் அஞ்ஞானம்என இரு அத்தியாயங்களில் கூறுகிறார். கனவு பொய்யன்று என்பதால் அந்த உதாரணம் பொருத்தமாகாது. பாம்பு, பழுது என்பவை இல்லாதவை அல்ல என்பதால் அவை மாயையாகாது, அறியாமையாகும் என்பது பகவான் கூறும் விளக்கம்.

பகவான் தத்துவம் முழுமை, முழு முதற் கடவுள் முடிவான சிருஷ்டி என்ற அடிப்படையுடையது. அதனால்,

– பிரம்மம் சிருஷ்டியில் எல்லா நிலையிலும், எல்லா நேரங்களிலும், எல்லா ரூபங்களிலும், பிரம்மமாகவேயிருக்கிறது.

- நாம் பிரம்மம், நம் செயல்கள் பிரம்மம்.
- நல்லது பிரம்மம், கெட்டது பிரம்மம்.
- ஞானம் பிரம்மம், அஞ்ஞானம் பிரம்மம்.
- பிரம்மம் ஆனந்தம் தேடி அஞ்ஞானத்தை சிருஷ்டித்து, அதனுள் மறைந்து, வெளி வருவது பிரம்மானந்தம் என்பதால் சிருஷ்டியில் அஞ்ஞானம் உள்ளது.
- சிருஷ்டிக்கு அஞ்ஞானம் தேவையில்லை; ஆனால் நாமுள்ள இந்த சிருஷ்டிக்கு அஞ்ஞானம் அத்தியாவசியம்.
- சிருஷ்டியின் இரகஸ்யம் புரிய ஞானம், அஞ்ஞானம் ஏற்பட்ட வகை, அவற்றுக்குள்ள தொடர்பு, அஞ்ஞானம் ஞானமாகும் வகை, உபநிஷதம், வேதம் கைக்கொண்டு விளக்கம் கூறிய முறை, பகவான் கூறுவது எப்படி அவற்றிலிருந்து வேறுபடுகிறது என்பவை நாம் அறிய வேண்டியவை.

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**பிரித்துப் பார்க்கும் திறன் நாம் எந்த நிலைக்கு உயர்ந்துள்ளோம் என்பதைப்பொருத்தது. கண்டம் நமக்கு அகண்டமாகத் தெரிந்தால்தான் *The Life Divine* விளங்கும்.**

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

## நேர்மையான காலம்

டெபுடி கலைக்டர் இன்ஜினீயரை அழைத்து டீ சாப்பிட உட்கார்ந்தார். 1950இல் இன்ஜினீயர் சம்பளம் 187 ரூபாய், டெபுடி கலைக்டர் சம்பளம் 230 ரூபாய். டெபுடி கலைக்டர் 3 தாலுக்கா அதிகாரி. இன்ஜினீயரை அழைத்து உபசாரம் செய்வதில்லை. இன்ஜினீயர் நாணயமறிந்து பாராட்ட வேண்டி அதைச் செய்தார்.

கிராமத்தில் பணக்காரன் வைத்தது சட்டம். 70 ஏக்கர் சர்க்கார் நிலத்தை வெகுநாட்களாக ஒருவர் அனுபவித்து வருகிறார். இன்ஜினீயர் இளைஞர். கல்லூரியை விட்டு வந்த புதிய அனுபவம். இக்கிராமத்தில் ஒரு வேலை செய்தார். நீர் தேங்கி, விவசாயம் பெருகும் என்பதால் (barrage) ஓடும் நீரைத் தடுக்க அணை கட்ட முன்வந்தார் இன்ஜினீயர். அது நடந்தால் அக்கிரமமாக ஆக்கிரமிக்கப்பட்ட 70 ஏக்கர் நிலமும் ஏரியாகும். அவர் ரூ.10,000 கொண்டுவந்து இன்ஜினீயரிடம் "இதை எடுத்துக் கொள்ளுங்கள். வேலையை நிறுத்துங்கள்" என்றார். அன்று அது 20 ஏக்கர் விலை. இன்ஜினீயருக்கு 5 வருஷ சம்பளம். இன்ஜினீயர் மறுத்துவிட்டார். டெபுடி கலைக்டரிடம், "நீங்களாவது உதவுங்கள்" என்றார். டெபுடி கலைக்டர் மறுத்துவிட்டு, இன்ஜினீயரை அழைத்துப் பாராட்டினார்.

✡ **இந்த ஆபீசர்கள் மகாத்மா பரம்பரையில் வந்தவர்கள்.**

✡ **பணம் வாங்கலாமா, வேண்டாமா என்ற சபலம் எழுந்து மறுப்பவர் இல்லை.** ***அந்த எண்ணமே தோன்றாத உத்தம புருஷர்கள்.***

✡ **அது நேர்மையான காலம்; அவர்கள் நாணயமானவர்கள்.**

காலம் கெட்டுப்போனபின் நாணயத்தைக் கைவிட மறுப்பவன், அதனால் தொந்தரவுக்கு உட்படாதவன் அன்னை அன்பர்.

❀❀❀

## பிரமிட்டிலுள்ள அரசர்கள் உடல்

எகிப்தில் பிரமிட் கட்டப்பட்டது. அதனுள் அரசர்கள் உடல் தைலக் காப்பிட்டு வைக்கப்பட்டன. அவை பல ஆயிரம் ஆண்டுகளாக சிதையாமலிருக்கின்றன. மனத்தைப் பலவாறு பிரித்து அன்னை பேசுகிறார். உடலுக்கு மனம் உண்டு, உயிருக்கு மனம் உண்டு என்று அவற்றை bodily mind, vital mind என்கிறார். உடல் உயிருள்ளது. அதனுள் உயிரற்ற பாகம் உண்டு (Matter). அதற்கும் மனம் உண்டு என்றவர் அம்மனத்தை material mind ஜடமனம் என்கிறார்.

**தைலம் ஜடமனத்திற்கு உயிர் கொடுத்தால்
அம்மனம் (material mind) உடல் உருவம் சிதையாமல்
பல ஆயிரம் வருஷமிருக்கும். அதை எகிப்தியர் செய்தனர்
என்கிறார் அன்னை.**

நாம் செய்யும் வேலைகளைப் பழக்கம் அதிகமானால் கை தானே செய்யும். டைப்பிஸ்ட்க்கு எழுத்துள்ள இடம் கண் பார்க்காமல் தெரியும். விரலுக்கே தெரியும். பாங்க்கில் பணம் எண்ணுபவர் மற்றவர் பேசுவதையும் கவனித்துக்கொண்டே எண்ணினாலும், தவறு வருவதில்லை; விரல் அறியும். அரிவாள்மணையில் வெங்காயம் அரிபவர் மிகவிரைவாகப் பார்க்காமல் அரிவார். கையை வெட்டிக் கொள்வதில்லை. நாம் அறிந்ததை உடல் அறிந்தால், உடலில் உள்ள மனம் body mind அறிந்தால், கண் பார்க்காமல் செய்யலாம். ஜடமனம் அதற்கும் கீழ் உள்ளது. எகிப்து மக்கள் கண்டுபிடித்த தைலம் ஜடமனத்திற்கு உயிர் கொடுத்தது. அம்மனம் உடலின் உருவத்தை ஆயிரம் ஆண்டாகப் பாதுகாக்கிறது என்கிறார் அன்னை.

❀❀❀